187

Regd. No. M. 878.

OCT 1922

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை நாகரீகம் இவைகளை பயபிவிருத்தி செய்யும் ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

1922வருஷ ஜுன், ஜுலை ப. 3. 3.

ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

...விக்டோரியா அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

விஷயங்கள்.

தற்கால நிலைமை	32. A
தர்மாதர்ம ஸ்வரூபம்	32
அவதாரங்கள்	45
விசேஷக்குறிப்புகள்	49
பதஞ்சலியாரின் யோக சாஸ்திரம்	50
பிரஹ்மஞான எண்ணங்கள்	60
இறந்தகால வுணர்ச்சி	65
பிரஹ்மஞானத்தின் பிரதமதத்துவங்கள்	68
விளம்பரம் T. S. Tamil Publication Society	71

பூர்ணசந்திரோதயம் முந்திய வால்யும்கள் தேவையுள்ளவர்கள் எங்கள் ஆபீசுக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம் விலை ரூ 2. சில பிரதிகள் குறைந்த வால்யும்கள் விலை இல்லாமல் இனாமாகக் கொடுக்கப்படும் தேவையுள்ளவர்கள் தபால் சார்ஜுக்கு மட்டும் கட்டணம் செய்ய வேண்டும்.

தபால் சார்ஜ் உள்பட வருஷச்சந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4

மானேஜர்
பூர்ணசந்திரோதயம்:
Hall of Theosophy, MADURA.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - OCT 1922
MADRAS

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி	துந்துபி௵ ஆனி, ஆடி௴	பகுதி
13	1922௵ ஜூன், ஜூலை௴	2, 3

தற்கால நிலைமை.

ஆர். ரெங்கசாமி அய்யரால் மொழி பெயர்ப்பு.

(8-ம் பக்கத்தொடர்ச்சி.)

"என் எண்ணத்தை ஒருவரும் தவறாகக் கொள்ளாம லிருக்கும்பொருட்டு 1895-ம் வருஷம் முதல் நான் ஒரு ராஜகீயக் கட்சியையும் சேர்ந்தவனல்லவென்றும் நான் ஒன்றிலும் கலப்பில்லாமல் ஒதுங்கி நிற்கிறேன் என்றும் ஒத்துழையாமைக் கக்ஷியைச் சேர்ந்தவனல்லன் என்றும், அப்பெயரே சர்வ சகோதரத்துவத்தில் நம்பிக்கையுள்ள எனக்கு அறுவறுப்பைத் தருகிறதென்றும் சொல்லுகிறேன்.

ஆனால் பரோபகார லட்சியங்களைக் கொண்டிருந்தும் லக்ஷக்கணக்கான மனிதர்களைக் கொல்வதற்கேதுவான ஐரோப்பிய மகாயுத்தத்தை இனி யுத்தம் உண்டாகாவண் ணம் செய்யவந்த யுத்தம் என்ற காரணம் கொண்டு, சரி யென்று சொல்லும் சிலர் எவ்வாறு நியாயத்துடனும், பொ

ருத்தத்திடட்டும் ஸ்ரீமான் காந்திபவர்களுடைய இயக்கத்தை சரியன்று என்று மட்டும் கூறுமல் மிகவும் பலமான வார்த்தைகளைக்கொண்டு கண்டிக்கவும் செய்கிறூர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. அவ்வியக்கமோ பயன்பெறும்வரை நடக்கமுடியுமோவென்று சம்சயிக்க இடமுண்டு. அல்லது அது மனிதர்களுடைய மனப்பக்குவத்துக்கு ஏற்றதல்லவென்று சந்தேகிக்கலாம். ஆனல் அது அன்பையே தூண்டுகோலாய்க் கொண்டது. உலகக்ஷேமத்தையே பயனுகக் கொண்டது. ஆத்ம சக்திகளையே கருவிகளாகவும், வீரத்தனமான தன்னயத்தியாகத்தையும், வேண்டுமென்று கஷ்டங்களை அழைத்துப் பொறுப்பதையுமே முறைகளாயும் கொண்டிருப்பது. அவ்வியக்கத்தின் நோக்கமோ மிகவும் சிரேஷ்டமானது. மனிதனது மனதினின்று த்வேஷத்தையும் கொடுமையையும் விலக்கி, மேல் உலகங்களில் உண்மையான சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஸ்தாபித்து, மனிதத் தன்மையையே ஒரு படி உயர்த்தவேண்டுமென்று ராமராஜ்யத்தைப் போன்ற ஒரு சீரான நிலைமையை இவ்வுலகில் ஸ்தாபிக்கவேண்டுமென்று விரும்பும் இவ்வியக்கத்தை மிகவும் கடினமான சொற்களால் கடிந்து பேசுவது நியாயமல்லவென்று எண்ணுகிறேன்.

அமைதியான சமயத்தில், பக்ஷபாதமின்றி, கலக்கத்தால் குழம்பாத மனதுடன், உலகத்திலுள்ள ஆத்மார்த்த இயக்கங்களில் எல்லாம் பெரிய இயக்கமாகிய பிரஹ்ம ஞான சபையின் தலைவராகிய டாக்டர் பெஸண்டம்மையவர்களால் இனிமையான வார்த்தைகளில் கூறப்பட்ட மேற்கண்ட அபிப்பிராயத்தை யாவரும் மனதிற்கொண்டு, அதனுல் மேன்மை பெறுவர்கள் என்று எண்ணுகிறேன்.” என்றூர் உபேந்திரநாதவஸு.

இதற்கு மாது ஸ்ரீ அவர்கள் எழுதியிருக்கும் மறுமொழியாவது:—“என் பிரிய நண்பரும், சகோதரருமான உபேந்திரநாத வஸுவின் கிருபத்தைப் பத்திரிகையில் அச்

சிடமாட்டேன் என்று சொல்ல முடியாததால் அப்படி அச்சிடுகிறேன். ஆனால் அது எனக்கு மிகவும் மனத்துன்பத்தைத் தருகிறது பகிரங்கமாய் எந்த வார்த்தைகளைச் சொல்ல இஷ்டப்படேனோ அவ்வார்த்தைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறதேயென்று வருந்துகிறேன். ஓர் ஜீவன் உன்னதமான ஸ்திதியிலிருந்து விழுகிறதென்றால் வருத்தமாய்த்தானிருக்கும். நான் முன் சொன்னதாய்க் கூறிய வார்த்தைகளில் ஒன்றையாவது நான் இல்லையென்று சொல்லவில்லை. அவ்வார்த்தைகளை யெழுதும் பொழுது எந்த ஸ்திதியில் ஸ்ரீமான் காந்தியவர்கள் இருந்தாரோ அந்த நிலைமையை மேற்கூறப்பட்ட வார்த்தைகள் விவரிக்கின்றன. ஒரு ஜீவன் முக்தி நிலையடையும் வரை ஆத்ம வழியிலிருந்து பதனத்தையடைய இடமுண்டு என்பதையும், நான் கூறிய வார்த்தைகளால் சூசிக்கப்பட்ட நிலைமையை அடைந்த ஜீவன் உலகவிகாச முறைக்கு எதிரிகளான விரோதிகளுடைய (ரக்ஷஸ்களுடைய) தாக்குதலுக்குக் குறியாகிறான் என்பதும் குப்தவித்தியாப்பாவிகள் எல்லோரும் அறியும் சங்கதி. ஹிந்து ஒவ்வொருவனும் தேவர்களும் அஸுரர்களும் உலகத்தை தத்தம் வசப்படுத்த எப்பொதும் முயன்றுவருகிறார்கள் என்று அறிவான். பிரஹ்ம ஞான சபையாரோ தேவர்களையும், அஸுரர்களையும் முறையே அக்னி குமாரர்களும் அவர்களின் ஸேவகர்களும் என்றும், "கருத்த முகத்தரும் அவர்கள் படைகளும்" என்றும் கூறுவது வழக்கம்.

மனித வர்க்கத்தின் விகாஸ முறையில் இது ஒரு நெருக்கடியான சமயம். மேற்கூறியபடி ஒரு பெரும் யுத்தமானது நிகழ்ந்து வருகிறது. போர் முனையில் நிற்கும் இரு திறத்தாரும் தங்களுக்கு உதவியாய் மனிதர்களில் ஏற்றவர்களைத் தம் வசப்படுத்துகின்றனர். ஆத்ம விகாஸ முறையில் உலகத்தைச் செலுத்துமாறு முந்தியவர்களும், அதற்கு மாறான வழியில் செலுத்துமாறு பிந்தியவர்களும் முயலுகிறார்கள். ஜன சமூகங்களின் பேரில் அதிகச் செல்வாக்குள்ள

மனிதர்களைத் தான் இருதிறத் தலைவர்களும் அப்படி வசப் படுத்த முயல்கிறார்கள். ஏன் எனில், அவர்களால் தான் தம் காரியங்களை உலகில் எளிதில் சாதிக்க இயலும்.

ஐரோப்பிய மகா யுத்தத்தின் துவக்கத்தில் இவ்விஷய மாய்த் தான் நான் பேசினேன். குப்த வித்தியாப்பியாஸி ஒருவனும் இந்த யுத்தத்தில் ஒரு திறத்திலும் சேராமல் ஒதுங்கி நிற்கலாகாது என்று சொன்னேன். ராணுவ பலத்தையே ஆசிரயித்து நிருவப்பட்ட ஓர் ஸாம்ராஜ்யத்திலிருந்து கொடுங்கோன்மையைத் தொலைக்க வேண்டியிருந்தது. அக்னி குமாரர்கள் தங்களுடைய நித்திய விரோதிகளான கருத்த முகத்தரை நீண்ட போரின் முடிவில் ஜயித்தனர். எந்த உண்மைகளுக்காக ஐரோப்பாவில் சண்டையிட்டனரோ அதே உண்மைகளை இந்தியா சம்பந்தப் பட்டமட்டில் இங்கிலாந்து அனுசரிக்கவில்லை யாகையால் அந்த யுத்தமானது அவ்வளவு காலம் வரை முற்றுப்பெறத் தாமதமாயிற்று. அதே உண்மைகளை நிலை நிறுத்தவே இந்தியாவும் மிகவும் உற்சாகத்துடனும், ஆவலுடனும், முழுமனதுடன் முயன்றது. அப்படியிருக்க இங்கிலாந்து இந்தியா சம்மந்தமாயும் அதே உண்மைகளைக் கைப்பற்றி நடந்திருந்தால் யுத்தமானது வெகு காலத்திற்கு முன்னரே அனுகூலமாய் முடிந்திருக்கும். இதே விஷயத்தை அக்காலத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன். அக்காலத்தில் ஸ்ரீமான் காந்தியவர்களும், நானும் ஒரு சார்பினராயிருந்தோம். நான் இந்தியர்களை இங்கிலாந்துக் குதவியாகச் சண்டையிற் சேருங்கள் என்று உற்சாகப்படுத்தினேன். ஸ்ரீமான் காந்தியும் நேரில் ஊர் ஊராய்ச் சென்று சிப்பாய் சைனியத்திற் காள் சேர்த்தார். 1919-ஆம் ரௌலட் சட்டத்திற்கு விரோதமாகச் செய்த குழப்பத்தில் நாங்கள் இருவரும் பிரிந்தோம். அவர் இதுவரை கீழ்ப்படிந்த சட்டங்களை யெல்லாம் மீறவேண்டு மென்றார். அதிலும் அப்போது மீறுவதற்காகத் தேர்ந்தெடுத்த சட்டமானது கடுமையான தண்டனைகளைக் கொண்டிருந்தபோதிலும் உப

யோகமுள்ள சட்டமாயிருந்தது. ஒரு கமிட்டியாரால் அதாவது உண்மையாக ஸ்ரீமான் காந்தியால் தீர்மானிக்கப்படும் சட்டங்களை என் மனச்சாக்ஷி அச்சட்டங்களை சரியென ஒப்பினும், அக்கமிட்டியின் வார்த்தைக்காகக் கீழ்ப்படியாமல் மறுப்பதற்கு நான் இணங்கமாட்டேன் என்று தீர்மானித்தேன்.

இவ்விஷயங்களைப்பற்றி யாதொரு தாவாவும் இல்லை. நானும் ஸ்ரீமான் காந்தியும் இருவரும் உலகத்தை ஈசுவரன் ஆளுகிறார் என்பதை நம்புகிறோம். ஒவ்வொருவரும் தனக்குத் தானே நிச்சயம் செய்யவேண்டியது யாதெனில், நான் பெருந்த அபாயத்துக்குட்பட்டிருக்கிறேனா அல்லது ஸ்ரீமான் காந்தியா என்று இதை நான் பகிரங்கமாகச் சொல்லியிருக்கவே மாட்டேன். ஆனால் நான் ஒரு சமயம் சொன்ன வார்த்தைகள் அப்போது உண்மையாயிருக்க, அவ்வார்த்தைகளை இப்போது கூறி, என்னுடைய மாறுதலைக் காட்ட உபயோகப்படுத்துவதில நான் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. அவர் இந்தியாவை அபாயகரமான மலையின் உச்சிக்கு இழுத்துச் செல்லுகிறார். அவரைப் பின்பற்றினால் இந்தியாவானது அபாயகரமான அராஜகமாகிய பெரும் பாழும் பள்ளத்தில் விழுந்துவிடும் என்பதிலும் உலகத்தில் உள்ள தேசங்களின் மத்தியில் இப்போதடைந்திருக்கும் பதவியை யிழக்க நேரிடும் என்பதிலும் எனக்கு சந்தேகமில்லை. அதையே கூறுகிறேன். நான் இந்த வார்த்தைகளைச் சொல்லும்படி என்னைக் கட்டாயப்படுத்தியிருப்பது மிகவும் அநீதமானது. இருந்த போதிலும், நான் இந்த வார்த்தைகளைப் பகிரங்கமாய்க் கூறவேண்டியிருக்கிறது. ஏனெனில், என்னுடைய பழைய வார்த்தைகளை அப்போதிருந்த நிலைமையில் உண்மையான வார்த்தைகளை நம்பி ஒருவரும் இந்தியாவின் நாசத்திற்கு உதவியாகயிருக்கும்படி ஏமாந்து போகாமலிருக்கச் செய்வது என் பொறுப்பாயிருக்கிறது. ஆனால் நான் தான் இப்போது தவறிவிட்டேனென்றும் ஸ்ரீமான் காந்தியல்லவென்றும் சிலர் சொல்லலாம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

ஒரு ஏரிக்கரையில் கைவிரல் நுழையக் கூடிய ஒரு சிறு துவாரம் இருந்தாலும் அது நாளடைவில் பெரு வெள்ளம் அறுத்தோடக்கூடிய பெரும் உடைப்பாய் ஆய்விடும். அதுபோல் அற்பமாய்த் தோன்றும் ஒரு சிறு சட்டத்தின் கீழ்ப்படியாமையானது கடைசியில் உலகத்தையே காப்பாற்றும் நியாயம் என்கிற அணையையே உடைத்துவிடும் என்று என் உள்ளுணர்வால் கண்ட நான் அது முதல் ஸ்ரீமான் காந்தியை இடைவிடாமலும், உறுதியாயும் எதிர்த்து வருகிறேன். உலகத்தைக் கட்டுக்கடங்காமை யென்ற பெரிய அராஜக வெள்ளமானது மூடாமலிருக்கும் பொருட்டு அப்படி எதிர்த்து வருகிறேன். வெகு வெகு தூரத்தில், எவ்வளவோ காலத்திற்கு அப்பால் மனிதர்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்களாக இருந்து தம்முள் விளங்கும் சைதன்யமாகிற பரமாத்மாவின் ஆணைப்படி தமக்குப் புறம்பே வேறு ஒரு பரமாத்மா வேண்டாதவராய், சிறியர் முதல் பெரியவர் வரை பரமாத்மாவை அறிந்திருப்பர். ஆகையால் பரமாத்மாவைத் தெரிந்துகொள் என்று உபதேசிக்க குரு அவசியமில்லாததாய் இருக்கப்பட்ட காலத்தை ஸ்ரீமான் காந்தி தன் மனக்கண்ணால் கண்டு அக்கனவினால் மயங்கினதாக நான் நம்புகிறேன். அவர் கற்பனையின் சூக்ஷ்மம் இதுவே, அவர் கெடுதலினால் மயக்கப்படாதபடி வெகு தூரம் விகாஸமுறையில் சென்று விட்டார். மனிதவர்க்கத்தினால் கடைசியில் அடையவேண்டிய நிலைமையை தன் மனத்தினால் தர்சித்து விட்டார்.

ஆனால் அவ்வுயர் தத்துவங்களை அபக்குவமான தற்கால உலகத்தில் தம் அந்தராத்மாவினால் தமது தேகாதிகளை அடக்கியாளப் பழகாத மனிதர்கள் ஸ்திரீகளுக்குள் பழக்கத்துக்குக் கொண்டுவருவது ஜனசமூகத்தையே துஷ்டாத்மாக்களின் கையில் ஒப்பிவித்தது போலவும், அதைப் பெரும் விபத்துக் குள்ளாக்குவதாகவும் ஆகும். ஆகையினால் தான் அடிக்கடி கொடுமையின்மையை அதாவது அஹிம்ஸையை அவலம்பிக்க வேண்டுமென்று கூறுகிறார்.

அவர் ராஜாங்கத்திற்கு விரோதமாகப் பேசிய பேச்சுகளைக் காரணமாகக்கொண்டு, வயதிலும் அறிவிலும் குறைந்தவர்களுடைய குரோதங்கள் கிளம்பி எங்கும் கட்டுக்கடங்காத தன்மையாய்ப் பரப்பியபோழ்து அவர் இது என்ன விபரீதமாயிருக்கின்றது என்று திடுக்கிட்டார். எங்கும் பரவியுள்ள ஜாதி துவேஷம் என்ன, கொலைகள் என்ன, அபலர்களை நிர்ப்பந்திப்பது என்ன, எதேச்சா சேவகர் அல்லது வாலண்டியர்கள் என்ற பட்டம் புனைந்தவர்களது உத்திரவுகளுக்குக் கீழ்ப்படியாத ஸ்திரீ புருஷர்கள் பேரில் இடப்பட்ட மிகவும் அருவருப்புக் கிடமான தண்டனைகள் என்ன, ஸ்திரீகளை சவுக்கடியா லடித்ததென்ன, ஒரு கிராமத்தின் தெருக்கள் வழியே ஒரு ஸ்திரீயை நிர்வாணமாக ஓட்டித் துரத்தியதென்ன, இறந்தவர்களுக்கும், இறக்கும் தருவாயிலிருப்பவருக்கும் செய்த அவமானச் செய்கைகள் என்ன, குழியில் சேமிக்கப்பட்ட பிணத்தைக் குழியிலிருந்து வெளிப்படுத்தி அதன் பரிதாபப் படத்தக்க முகத்தில் கட்டையால் அடித்து அசங்கியப்படுத்தியதென்ன, மலையாளத்தில் நடைபெற்ற கிலாபத் ராஜ்யத்தின் கொடூரங்கள் என்ன, தேசத்தின் பற்பல பாகங்களில் நடந்த கலகங்கள் என்ன இவைகளெல்லாம் ஆத்ம விகாஸத்தின் பலன்களா? அல்லது மகாத்மா அல்லது அவதார புருஷனின் கற்பினையின் முடிவாயிருக்க முடியுமா? ஸ்ரீமான் காந்தியே தனக்குக் கடவுள் கொடுத்த எச்சரிக்கைகளைத் தான் அலக்ஷியம் செய்ததாக ஒப்புக்கொண்டிருக்கிறார். ஜனங்கள் இவரால் போதிக்கப்பட்ட அஹிம்ஸை என்ற கொள்கையை நடத்தையில் கொண்டுவர அனர்கர்கள் என்று அவர் சில சமயங்களில் உண்மையாய் நம்பியதற்கும், அவர் முன்னும் பின்னும் மாறிக்கொண்டு வந்ததற்கும், பரடோலியில் பச்சாத்தாபப்பட்டதற்கும், டில்லியில் மறுபடியும் சட்டத்துக்குக் கீழ்ப்படியாமையை அங்கீகரிக்க அனுமதி கொடுத்ததற்கும், பலபேர்கள் நிர்ப்பந்தம் செய்ததால் தான் அவ்வாறு இணங்க நேரிட்டதென்று ஒப்புக்கொண்டதற்கும், அஹிம்ஸையானது ஒரு தந்திரம் தான் என்றும் தந்திரத்தை சம

யம் வாய்ந்தால் மாற்றுவது தவறாகாது என்றும் அவர் வாதித்ததற்கும்--இவையெல்லாவற்றிற்கும் ரஹஸ்ய காரணம் இதுவே. அவரை ஜகத்துக்கு முக்கிய விரோதியான ராக்ஷஸ சக்தியின் ஒரு கருவியாக நினைத்திருந்த எனக்கே கடைசியாய்க் கூறப்பட்ட வாதமானது ஆச்சரியகரமாயிருந்தது. கிலாபத்துக் கக்ஷிபார் மதத்திலோ அஹிம்ஸையானது ஒரு கொள்கையில்லை. அவர்கள் மதத்திலோ பலாத்காரத்தினால் காரியத்தைச் சாதித்தல் சரியெனப்படும். ஆகையால் கடைசி பக்ஷமாக அவர்களுடைய உதவியை எப்படியாவது நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டு கூறப்பட்ட வார்த்தையென்றே கடைசியாய் சொன்ன வார்த்தையை நம்புகிறேன்.

நான் கடைசியாய் ஸ்ரீமான் காந்தியை விட்டுப் பிரிந்தது முதல் நான் அவலம்பித்த முறை இதுவே. இதைக் கொண்டு என்னுடைய வார்த்தைகளையும், நடத்தைகளையும் சோதித்தால் அர்த்தமாகும். அது முதல் இடைவிடாது தீவிரமாயும் மாறாமலும் அவரை எதிர்த்து வந்திருக்கிறேன். என்னுடைய மனச்சாக்ஷியைப் பின்பற்றி இவ்வாறு நடக்கிறேன். நான் தீர்க்கதர்சி யென்று சொல்லிக்கொண்டு நான் முன் சொன்ன வார்த்தையை என்னுடைய நித்திய நடத்தைக்கும் நான் மிகவும் அந்தரங்கமாயும், பரிசுத்தமாகவும் கொள்ளும் உண்மைக்கும் விரோதமாக எடுத்துக் கூறப்படுவதால் நான் உண்மையென்று நம்புகிற இதைக் கூறுகிறேன். அதாவது என்னுடைய வேலையும் ஸ்ரீமான் காந்தியின் வேலையும் மேலுலகத்திலிருக்கும் சக்திகளுக்குக் கால்வாய்கள். யாருடைய வேலையானது ஈசுவர சம்மதமானது என்பதற்கு வெகுகாலத்திற்குப் பின் வரையப்படும் சரித்திரம் தான் நிர்ணயம் செய்ய இயலும். அதற்கு மத்தியில் மனிதர்கள் எங்கள் இருவர்களுடைய கர்மங்களின் பலன்களைக்கொண்டு தங்கள் இஷ்டப்படி எங்களைப் பற்றி அபிப்பிராயம் கொள்ளட்டும்."

அன்னிபெஸண்டு.

7-OCT 1922

தர்மாதர்ம ஸ்வரூபம்-தர்மானுஷ்டானம்.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு குளத்தின் ஜலத்தில் கல்லைப் போட்டால், ஒரு அலை உற்பத்தியாகி அந்த அலை குளமெல்லாம் வியாபிக்குமல்லவா? அவ்விதமே மேற்கூறிய வண்ணம் ஆகாச தத்துவத்தில் அலை ஜனிக்கின் தட்சணமே அதன் அலைகள் ஆகாச தத்துவத்தின் துவாரா பிரபஞ்சமெல்லாம் வியாபிக்கும். இந்த அலை தூரமாயுள்ள வேறொரு தந்தியில்லாத டெலிகிராப் யந்திரத்தில் தாக்கி அதின் மூள்ளைச் சலிக்கப்பண்ணும். சமாசாரத்தை அந்த யந்திரக்காரன் தெரிந்து கொள்வான். சாதாரண தந்தி ஸமாசாரம் தந்தி மூலம் மற்றொரு ஸ்டேஷனுக்குச் செல்லும். தந்தியில்லாத தந்தி ஸமாசாரம் ஆகாச தத்துவத்தின் வழியாய்ச் செல்லும். இவ்வித யந்திரங்கள் பம்பாய், டில்லி, மதராஸ் முதலான பட்டணங்களிலும் புகைக்கப்பல்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதம் தந்திக்கம்பியில்லாமலே சமாசாரங்களை அனுப்புகிறார்கள். தெரிந்தும் கொள்கிறார்கள்.

புவர்லோகமென்பது அகாச தத்வத்தைவிட அதிசூக்ஷ்மமான தத்துவமாகி ஈரத்துணியின் ஜலத்தைப்போல் பூலோகத்தில் பிரவேசித்து வியாபித்து இவ்விடமேயிருக்கின்றது. இந்த புவர்லோகம் திவ்ய திருஷ்டியுடையவர்களுக்குப் புலப்படும். அவ்விதமே சுவர்க்கலோகம் புவர்லோகத்தைவிட அதிசூக்ஷ்மமான தத்துவமாகி ஈரத்துணியிலுள்ள ஜலமும், ஜலத்திலுள்ள சர்க்கரையும் எங்கும் வியாபித்திருக்குமா போல் சுவர்க்கலோகம் பூலோகம் புவர்லோகங்களில் நுழைந்து வியாபித்து இவ்விடமேயிருக்கிறது. இவ்விதமே ஸப்தலோகங்கள், மேல்லோகங்கள் கீழ்லோகங்கள் எல்லாம் எல்லாவற்றிலும் நுழைந்து

வியாபித்திருக்கும். இந்த உலகங்கள் அடுக்குப் பானையைப் போல் ஒன்றின் மேல் ஒன்றில்லை. இந்த லோகங்களெல்லாம் ஸ்திதி பேதங்களே ஒழிய ஸ்தல பேதங்களன்று. (சுபால ப்ரஹதாரண்ய உபனிஷத்துக்களைப்பார்க்க).

ஜீவனுக்குச் சட்டைகளைப் போல் ஸ்தூல சூக்ஷ்ம காரணமென்ற மூன்று சட்டைகளுள. ஸ்தூல சரீரம் பூலோகத்தின் பஞ்சபூதங்களாலே ஏற்பட்டதாகி ஆஹாராதிகளாலே நல்லதாகவும் கெட்டதாகவும் மாறிக் கொண்டிருக்கும். இது அன்னமயம் பிராணமயம் என்ற கோசங்களெனப்படும். சூக்ஷ்மசரீரம் புவர்லோக சுவர்க்க லோகதத்வங்களாலேஏற்பட்ட சட்டையாகஇருந்துஸ்தூல சரீரத்தில் நுழைந்து ஈரத்துணியிலுள்ள ஜலத்தைப்போல் வியாபித்திருக்கிறது. காரணசரீரம் (விஜ்ஞானமயகோசம்) மஹர்லோக தத்துவத்தால் ஏற்பட்ட சட்டையாகி ஈரத் துணியில் வியாபித்த சர்க்கரையைப்போல் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களில் நுழைந்து வியாபித்திருக்கிறது. ஸ்தூலசரீரமானது சாராயம் மாம்ஸாதிகளால் கெடும். ஸாத்விக ஆஹாராதிகளால்பரிசுத்தமாகும். இவ்வண்ணம்சூக்ஷ்மசரீரம்கோரிக்கைகளாலும் சங்கற்பங்களாலும் நல்லதாகவும் கெட்டதாகவும் மாறிக் கொண்டிருக்கும். கெட்ட சங்கற்பம் கெடுதலாகவும் நல்ல சங்கற்பம் நல்லதாகவும் மாறும். சங்கற்பங்களும்கோரிக்கைகளுமே சூக்ஷ்மசரீரத்திற்குடணவு இரண்டு அந்தஸ்துள்ள சட்டை இரண்டாகப் பிரிக்கப்படுவது போல்சூக்ஷ்மசரீரம் இரண்டாகப் பாகிக்கப்பட்டிருக்கிறது. புவர்லோக பஞ்சபூதங்களால் ஏற்பட்ட சரீரம் புவர்லோக சரீரமென்றும் (Astral Body) இதைவிட நுட்பமான ஸ்வர் லோக தத்துவத்தால் ஏற்பட்ட சரீரம் ஸ்வர் லோக சரீரமென்றும் (Mental Body) தத்வஞான சபையில் சொல்லப்படும். ஸ்தூலசரீரம் ஆஹாராதிகளால் நல்லதாகவும் கெட்டதாகவும் மாறுவதுபோல் புவர்லோக சரீரம் கோரிக்கைகளாலும் சுவர்லோக சரீரம் சங்கற்பங்களாலும் பிரதிநிமிஷமும் நல்லதாகவும் கெட்டதாகவும் மாறிக்

கொண்டிருக்கும். இதே இவைகளுக்கு உணவு. கோரிக்கைகளும் சங்கற்பங்களும் அனேகமாய் மிசிரமாயிருக்குமானபடியால் இந்த இரண்டு சரீரங்களும் ஒன்றாகவே யோசிக்கப்படும். ஒரு குளத்தின் ஜலத்தில் அனேகம் பீப்பாய்கள் மிதந்து கொண்டிருந்தால் நாம் ஒரு பீப்பாயை அசைத்த மாத்திரத்தில் ஜலம் அசைவுற்று இந்த ஜலத்தின் அலை எல்லா பீப்பாய்களுக்கும் தாக்கி பீப்பாய்களெல்லாம் அசையுமல்லவா? இங்கு பீப்பாய் சூக்ஷ்ம சரீரமாகவும் குளம் சூக்ஷ்மலோகமான புவர்லோக சுவர்க்க லோகங்களாகவும் அலையானது கோரிக்கைகளாயும் சங்கற்பங்களாயும் எண்ணவேண்டும். ஒருவனுக்குத் திருடவேண்டுமென்ற சங்கற்பம் ஜனித்தவுடனே அவனது சூக்ஷ்ம சரீரத்தில் கெட்ட அலை உண்டாகி அந்த அலையானது சுற்றுப் பக்கத்திலுள்ள புவர்லோகத் திரவியத்தில் தாக்கி புவர்லோகத்தில் அலையை உண்டாக்கும். இந்த அலை புவர்லோக மெங்கும் வியாபித்து இதரர்களுடைய புவர்லோக சரீரங்களில் அதாவது சூக்ஷ்ம சரீரங்களில் தாக்கி தந்தியில்லாத டெலிகிராப் போல் அனேகர்களுக்குத் திருட்டுப் புத்தியை உண்டுபண்ணும். இது நமக்குத்தெரியாமலே ஏற்படும். இவ்விதம் அதர்மம் அதிகரிக்கும். இவ்விதமே வியபிசாரம், லோபம், மோஹம், குரோதம், பயம், முதலான சங்கற்பங்கள் அனேகர்களுக்கு தொத்து வியாதியைப் போல் துஷ்ட சங்கற்பங்களை உண்டுபண்ணும். அவ்விதமே பக்தி, தயை, சாந்தம், முதலான ஸத்சங்கற்பங்கள் தந்தியில்லாத டெலிகிராப் போலவே எல்லோருடைய சூக்ஷ்ம சரீரங்களிலும் தாக்கி அனேகர்களுக்கு ஸத்புத்தியை உண்டுபண்ணும். இவ்விதம் சங்கற்பங்களும் கோரிக்கைகளும் கண்களுக்குப் புலப்படாமல் ஒருவனது சூக்ஷ்ம சரீரம் மூலம் இதரர்களுடைய சூக்ஷ்ம சரீரங்களுக்கு எப்பொழுதும் வியாபித்துக் கொண்டிருக்கும். சூக்ஷ்மாதி சரீரங்களும் புவராதிலோகங்களும் சங்கற்ப அலைகளும் திவ்ய திருஷ்டியுள்ளவர்களுக்குப்

புலப்படும். நமக்குப் புலப்படாது. ஆனால் புலப்படாமலே சங்கற்பங்கள் வேலைசெய்து கொண்டிருக்கும்.

ஒரு குளத்தின் ஜலத்தைக் கழியால் அசைத்தால், அங்கு ஒரு உருவம் ஏற்படுமல்லவா? இது முதல் விகாரம். இவ்விதம் அசைப்பதால் ஏற்படும் அலையானது குளமெங்கும் வியாபிக்குமல்லவா? இது இரண்டாவது விகாரம். இவ்விதமே மனதில் ஜனிக்கும் பிரதி சங்கற்பத்தாலும் சூக்ஷ்மலோகத்தில் ஒரு சங்கற்ப ரூபம் ஏற்படும். இது கொஞ்சதூரம் மாத்திரம் செல்லும். சங்கற்பத்தால் ஏற்படும் அலை சூக்ஷ்மலோகமெங்கும் செல்லும். விசேஷ தூரஞ் செல்லும். இவ்விதம் நல்ல அல்லது கெட்ட சங்கற்பங்களாலே அனேகர்களுடைய மனங்களை நமக்குத் தெரியாமலே நல்லதாகவும் அல்லது கெட்டதாகவும் மாற்றிக்கொண்டிருப்போம். ஒரு பந்தைச் சுவற்றில் அடித்தால் அது எதிர்த்து மறுபடி அதே வேகத்தோடு திரும்பிக் குதிக்கும். சேற்றில் அடித்தால் புதைந்துவிடும். துஷ்ட சங்கற்பங்களின் அலைகள் உண்மையான பக்தர்களையும், பதிவிரதைகளையும், ராஜயோகிகளையும், பிரஹ்ம நிஷ்டர்களையும் பாதிக்கமுடியாது. சகல சித்தர்களையும், துன்மார்க்கர்களையும் பாதிக்கும். துஷ்ட அலைகள் பெரியோர்களின் சூக்ஷ்ம சரீரத்தில் தாக்கி பிரவேசிக்க முடியாமல் பின்வாங்கி விரட்டியடிக்கப்படும். ஆனது பற்றியே பிரஹ்ம நிஷ்டர்கள் பேரில் பண்ணிய பிரயோகம் செல்லமாட்டாது. இது பின்வாங்கி வந்து ப்ரயோகம் செய்பவனைத் தாக்கி அவனை நசிக்கச்செய்யும். பெரியோர்களையும், பரிசுத்தர்களையும் தூஷித்தல் அல்லது துவேஷித்தல் அல்லது அபகாரஞ் செய்தல் இவைகளாலே இந்த துஷ்டனுக்கு பலமத்தான ஹானி யேற்படும். ஆகையால் ஸதா ராஜயோக நிஷ்டையைச் சாதித்தல்வேண்டும். அப்பொழுது சூக்ஷ்ம லோகத்துவாரா பரிசுத்த அலைகள் எல்லோருக்கும் வியாபிப்பதால் அனேகர்கள் புண்யாத்மாக்களாவார்கள். ஆகையால் நாம் ஸதா நல்ல சங்கற்பத்தை யுடையவர்களாகி

எல்லோருடைய நன்மைக்காகத் தியானித்துக் கொண்டிருத்தல் வேண்டும். அதனால் அளவில்லாப் புண்ணியத்தை அடைவோம்.

பூ:, புவ:, ஸுவ:, மஹ:, ஜன:, தப:, ஸத்யம், என்ற ஏழுலோகங்களுள. இவையெல்லாம் சேர்ந்து பிரஹ்மாண்டமெனப்படும்.

இந்த லோகங்களில் ஜன, தப, ஸத்ய லோகங்கள் திவ்ய லோகங்களாயுள்ளவைகள். இவைகள் சாசுவதமாயுள்ளவைகள். இம்மூன்றும் சேர்ந்து உத்தமலோகமென்பதாக இதில் வரையப்பட்டிருக்கிறது. இம்மூன்று லோகங்களும் ரிஷிகள் குமாரர்களின் ஸ்தானம். இந்த லோகங்களினின்று ரிஷிகள் ஈசுவர தேஜஸை, கீழ்லோகங்களான மஹர், சுவர், புவர், பூ என்ற லோகங்களுக்கும் இந்த லோகவாசிகளுக்கும் வியாபிக்கச் செய்து கொண்டிருப்பார்கள். அதாவது, ஈசுவரதேஜஸ் மஹர்லோகத்திற்கும் அந்த லோகவாசிகளுக்கும் முதலில் வியாபித்து, அதனிடமிருந்து சுவர் லோகத்திற்கும் அந்த லோக வாசிகளுக்கும் இவ்விதமே கீழ் லோகங்களுக்கும அந்த லோகவாசிகளுக்கும் வியாபிக்கச் செய்யப்படும். பிரஹ்மாவுக்குப் பகல் முடியவே, பூ, புவர், சுவர்லோகங்கள் நசிக்கும். மஹர் லோக வாசிகள் கூட அந்த லோகத்தை விட்டு பிரஹ்மாவின் வயிற்றில் உறங்கிக்கொண்டிருப்பார்கள். அப்பொழுது, ஜன, தப, ஸத்யலோகங்கள் மாத்திரம் சேஷித்திருக்கும். ஜீவன் ஜீவித்திருக்கும்பொழுது பூலோகத்தில் வசித்துக்கொண்டிருந்து மரணமடைந்தபின்னர் புவர்லோகத்தில் பிரவேசித்து பிரேதத்வத்தை ஒழித்த பின்னர் புவர்லோகத்தில் உத்தம பாகமான பிதுர்லோகம் பிரவேசித்து, புவர்லோகானுபவம் முடிந்தவுடனே சுவர்க்கத்தில் பிரவேசித்து, புண்யத்தை யனுபவிப்பான். பின்னர், புதிய சூக்கும ஸ்தூல சரீரங்களோடு பூலோகத்தில் ஜன்மியெடுப்பான்.

இவ்விதம் பிரதிஜன்மத்திலும், திரிலோகங்களில் பிரவேசித்துப்புண்ய பாபங்களை அனுபவித்து, அந்தந்த வாசனைகளாலே மீளவும் ஜன்மம் எடுப்பான். ஜீவிதம் பூலோகத்தில் இருக்கும் பொழுதுகூட தனது கோரிக்கைகளாலும் சங்கற்பங்களாலும் புவர் சுவர்க்க லோகங்களோடு சம்மந்தப்பட்டு இந்த லோகங்களில் வேலை செய்து கொண்டிருப்பான். ஒவ்வொரு கோரிக்கையாலும் புவர் லோகத்திலும், ஒவ்வொரு சங்கர்ப்பத்தாலும் சுவர்க்க லோகத்திலும் அலைகள் உண்டாகும்படி செய்து கொண்டிருப்பான். ஆனால் இது அவனுக்குத் தெரியாமலே நிகழ்ந்து கொண்டிருக்கும். ஆனால் யோகசித்தியால் புவர்லோக சுவர்க்கலோகங்களைப் பூரண பிரக்ஞையுடன் பார்த்துப் பிரவேசிக்கத்தகும்; தன்னுடையவும், இதரர்களுடைய சங்கற்பங்களையும், அலைகளையும் காணக்கூடியவனாவன்.

ஸ்தூல சரீரம், அன்னமயம் பிராணமயம் என்பதாக இரண்டாக பாகிக்கப்படும். பிராணமயகோசம் ஸ்தூல ஆகாச தத்வத்தால் (ether) ஏற்பட்டதாகி பிராண சக்தியை சூர்யனிடமிருந்து ஆகர்ஷித்து அன்னமய கோசத்தில் வியாபிக்கப்பண்ணும்.

இவ்விதம் ஜீவன் ஸ்தூல சரீரமென்ற ஆதாரத்தாலே பூலோக சம்மந்தத்தையும் பூலோகானுபவத்தையும் புவர் லோக சுவர்லோக சரீரங்களான மனோமயகோசத்தால் புவர்லோக சுவர்லோக சம்மந்தத்தையும் அந்த லோகானுபவங்களையும் அடைந்து கொண்டிருப்பான. கெட்டகார்யங்களாலும் கெட்ட கோரிக்கைகளாலும் கெட்ட சங்கற்பங்களாலும் கஷ்டத்தையும் நல்லவைகளால் சுகத்தையும் புண்யத்தையும் அடைவான். முடிவில் பாபத்தால் கஷ்டம் உண்டாகுமென்பதாகவும் புண்யத்தால் சுகமுண்டாகுமென்பதாகவும் பூ, புவர், சுவர்க்க லோகானுபவங்களால்

அறிந்து பாபத்தையும் பிரவிருத்தி மார்க்கத்தையும் ஒழித்து நிவிருத்தி மார்க்கத்தை யனுஷ்டிப்பதற்குப் பிரயத்தனப்படுவான்.

விஞ்ஞான மயகோசம் (காரணசரீரம்) மஹாலோக தத்வத்தாலே ஏற்பட்ட சட்டை. இது பலாபேக்ஷை யற்ற பிரேமை, ஞானம், மேலான பக்தி, பெரிய சித்தாந்த விசாரம் முதலிய வைகளுக்கிருப்பிடம். அதாவது இவைகளை சாதிக்கும் பொழுது ஜீவன் இந்த விஜ்ஞான மயகோசத்தின் மூலம் வேலைசெய்து கொண்டிருப்பான். இச்சட்டையில் பரிசுத்தமான சலனங்கள் ஜனிக்கும். காமக்குரோதாதிகளாகட்டும், சாமான்ய சங்கற்பங்களாகட்டும் இச்சட்டையில் சேரமாட்டா. இதனிடம் எவ்வித மலமுமிராது ஜீவன் காமாதிகளான ஹீன விருத்திகளில் இருக்கும் பொழுமி இச்சட்டை உறங்கிக்கொண்டிருக்கும். மனோமய கோசத்தின் அலைகள் இதை அனுகாலமுத்திரத்தின் பேரில் காற்றால் அலைகள் ஏற்பட்டிருந்தாலும் அதன் அடிப்பாகத்தில் இவைவியாபியாமல் அதன் அடியில் ஒட்டியுள்ள மீன்கள் மேல்அலைகளால் பாதிக்கப் படாவல்லவா? இவ்விதம் விஜ்ஞானமயகோசத்தில் வேலைசெய்ய வேண்டுமாயின் ஹீனகுணங்களைவிட்டு ஞானநிஷ்டாதிகளை அப்பியசிக்க வேண்டும். அப்பொழுது மஹர்லோகசரீரம் உறக்கத்தைவிட்டெழுந்து தொழில செய்யும். இதனுடையபரிசுத்த அலைகள் மஹர்லோகத்தில் வியாபித்து இதரர்களுடைய விஜ்ஞானமயகோசங்களுக்கு வியாபிக்கும். உத்தமலோக வழியாய் ரிஷிகள் அனுப்பும் திவ்யதேஜஸானது இந்தவிஜ்ஞானமயகோசத்தில் வியாபித்து இதன்மூலம் இதரர்களுக்கு வியாபிக்கும்.

இவ்விதம்ஜீவன் ஈசுவரனுடைய திவ்ய தேஜஸை உத்தம லோகத்தின்வழியாய் அடைந்து கீழ்சரீரங்களான சூக்ஷ்ம சரீரங்களுக்கும் இதரர்களுக்கும் வியாபிக்கச்செய்வதர்க்காக இக்கோசத்தை ஈசுவரன் ஜீவனுக்களித்திருக்கிறார்.

இத்தொழிலைச் செய்வதற்கு இந்தவிக்ஞான மயகோசம் உறக்கத்தை விட்டுக் கிளம்ப வேண்டும். சுஷுப்திஸ்திதியில் எதையும் அறியமுடியாத அஞ்ஞானமிருக்கும். மனோமயகோசம் செய்யும்பாபத்தைக்கிரஹிக்காமலும் பரிசுத்த லோகத்தினின்று ரிஷிகளிடமிருந்துவரும் திவ்யதேஜஸையும் ஆத்மசக்தியையும் நன்றாய் அடையாமலும் கிரஹிக்காமலும் இருக்கும். கீழ்சரீரங்களுக்கு நன்மையை உண்டுபண்ணமுடியாதிருக்கும். இதுவேசுழுத்தி அஞ்ஞானம். இது ஒழிவதற்கு விசாரம் வைராக்யம் என்ற இரண்டு உபாயங்களைப்பெறவேண்டும். சாத்விக ஆஹாராதிகளாலும் மேற்கண்ட சாதனத்தாலும் மனதை அடக்கி ஞான நிஷ்டையையும் ஸர்வபூததயையையும் அப்பியசிக்கவேண்டும். அப்பொழுது ஜீவன உறக்கம் விட்டெழுந்து ஞான மயகோசத்தில் வேலைசெய்ய ஆரம்பிப்பான். அப்போது ரிஷிகளின் தேஜஸானது இச்சட்டையின் வழியாய் எங்கும்வியாபித்து, சாந்தியை அடைவான. ஸ்தூலசூக்ஷ்ம காரணசரீரங்கள் பரிசுத்த நிலைமையை அடைந்தால் ஜீவன் இம்மூன்று ஆவரணங்களையும் அதாவது மூன்று அவஸ்தைகளையும் கடந்து துரிய நிலையை அடைவான். அப்பொழுது ரிஷிசிஷ்ய னெனப்படுவான்,

(5) சக்திசாமர்த்தியத்தைச் சிலவிடாததே ஒருதொழிலையும் நாம்செய்யமாட்டோம். பிரதிகாயப், பேச்சு' சங்கர்ப்பத்திர்க்குக்கொஞ்சம் கொஞ்சம் சக்தியைநாம் நமக்குத்தெரியாமலே சிலவிட்டுக்கொண்டிருப்போம். இந்தசக்தி நமக்கு எங்கிருந்து வருமோ யோஜிப்போம். நமக்குள்ள ஸகலசக்திகளும் ஈசுவரனுடையதே. எவ்விதமெனின்? ஒருமலையில் பரிசுத்தகங்கையைக்கொடுக்கும் ஒருபெரியசுனையுண்டு அந்த மலையின் பேரில் அச்சுனையைச் சுற்றிபெரிய தடாகம் உண்டு.

இத்தடாகமானது அச்சுனையின் பரிசுத்த ஜலத்தால் ஸதாநிறைந்திருக்கும். இத்தடாகத்திர்க்கு அனேகமதகுக உள. இத்தடாகத்திர்க்குள்ள ஒவ்வொரு மதகினின்று

மலையின்கீழ் சுற்றியிருக்கும் ஒவ்வொரு குளங்களுக்கும் ஜலம் பாய்ந்து கொண்டிருக்கும். இக்குளங்களுக்கு தடாகத்தின் மதகினின்றுவரும் ஜல ஆதாரத்தை ஒழியவேறு எவ்விதமான ஆதாரமுமில்லை. மதகினின்று பிரதி குளத்திற்கும் தனித்தனி வாய்க்கால்கள் உள. பிரதி குளத்திற்கும் ஒரு ஸ்வான்தாரனுண்டு. இந்த ஸ்வான்தாரன் தனது குளத்தங்கரையிலுள்ள மதகுவாயைச் சீர்படுத்தி குளத்திலுள்ள சேர் சகதி முதலிய கெட்ட மண்ணை எடுத்துவிட்டுக் குளத்துக்கு நீர்பாயும் கால்வாயைச் சீர்படுத்தி, அகலப்படுத்திக் கெட்டிசெய்யவே தடாகத்தின் சுத்தமான ஜலம் விசேஷமாகக் குளத்தில் பாயும். இந்த ஜலத்தால் இவ்வித ஸ்வான்தாரன் விசேஷ பலன்களை உற்பத்தி செய்து அனேகர்களுக்கு அன்னத்தை உண்டாக்குவித்துத் தானும் இதரர்களும் சுகப்படும் வண்ணஞ் செய்வான். இங்கு ஸ்வான்தாரனை குடியானவன் ஜீவனாகவும், குளம் மனதாகவும், இதன் வாய்க்கால் இந்திரியங்களாகவும், குளத்திலுள்ள குப்பை முதலிய ஆபாசங்கள் லோபமோஹக்குரோதாதிகளாகவும், மலையின்மேலுள்ள சுனை ஈசுவரன் (ஆன்மா)வாகவும், தடாகஜலம் சச்சிதானந்தாத்மஸ்வரூபமான ஈசுவர சைதன்ய சக்தியாகவும், கால்வாய் புத்தியாகவும் அதாவது ஸர்வபூத ஹிதஸ்வரூபமான பிரேமை (பூததயை) யாகவும், எண்ணவேண்டும். இவ்வித பிரேமையே புத்தியின் குணம். இவ்விதம் ஸர்வபூத ஹிதத்தை காயிக வாசிக மானஸிகமாய் ஸதா சாதித்தலே புத்தியோகமெனப்படும் (கீதை. அ.2) நம்மில் ஒவ்வொருவருடைய ஹிருதயத்தின்கண்ணுமுள்ள வாசுதேவன் (ஈசுவரன்) இடமிருந்து தடாக ஜலமென்ற ஆத்மசக்தியானது புத்தியென்ற கால்வாயின்வழியாய் மனமென்ற குளத்தில ஸதா பிரவேசித்து கொண்டிருக்கும். இந்தசக்தி மனதினின்று இந்திரியங்களுக்கும் சரீரங்களுக்கும் வியாபித்துக் கொண்டிருக்கும். இந்த ஆத்மசக்தி காரணசரீரத்தில் பிரவேசித்து அதன்வழியாய்ச் சூக்ஷ்மசரீரத்தில் பிரவேசித்து ஸ்தூல சரீரத்திற்கு ஸதா சென்று கொண்டிருக்கும். ஸ்தூலசூக்ஷ்மாதி சரீரங்களுக்

குள்ள சக்திகள், இவைகள் செய்யும் வேலைக்கு வேண்டிய சக்தி இவ்விதம் ஆத்மாவினின்று (ஈசுவரனிடமிருந்து) வரும் சக்தியைத்தைத்தவிர வேறொன்றுமில்லை. ஜீவனுக்குள்ள விவேகமும், ஸகல வித சக்திகளும், மனம், இந்திரியங்கள், சரீரம் செய்யும் வேலைகளுக்கு உபயோகப்படும் சக்திகளும் ஈசுவரனுடையவையே. அக்கிரமமாக அடித்தாலும், சுவாமி கோவிலுக்கு நடந்துசென்றாலும், இந்த சக்தியைக்கொஞ்சம் செலவிடுவோம். கோபிக்கினும், சங்கற்பிக்கினும், கடவுளை தியானிக்கினும், இந்த சக்தியையே கொஞ்சம் செலவிடுவோம். கெட்ட தொழில்கள், கெட்ட பேச்சுகள், கெட்ட சங்கற்பங்கள் இவைகளாலே இந்த திவ்ய சக்தியை துர்விநியோகப்படுத்துவோம். அபாரமான பாபத்தை அடைவோம். நல்லவேலைகள், நல்லபேச்சுக்கள், நல்ல சங்கற்பங்களாலே ஸத்விநியோகப் படுத்துவோம். புண்ணியத்தையடைவோம். நமக்கு ஈசுவரன் பிரதி நிமிஷமும் அனுப்பும் சக்தியை நாம் ஈசுவர கைங்கர்யத்திற்கும் தர்மவிருத்திக்கும் நல்லவேலைகளுக்குமே உபயோகப்படுத்த வேண்டும். இச்சக்தி நமதன்று. ஈசுவரனுடையதே. இதற்கு நாம் டிரஸ்டிகள் ஏஜண்டுகள், குமாஸ்தாக்கள். எஜமானனுடைய பணத்தைவிழுங்கிவிட்ட குமஸ்தாவைப்போலும், கஜானாப்பணத்தை தனது சொந்த வேலைக்கு உபயோகப்படுத்திக்கொண்ட கஜானாடிப்டிகலெக்டரைப் போலும், நாம் கெடுதலாக நடக்கின் கஷ்டப்படுவோம். சிட்சிக்கப்படுவோம். ஆகையால் சரீரம் இந்திரியம் மனம் இவைகளை ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு பூததயை அதிகரிக்க நம்மிடம் திவ்யதேஜஸ் மேன்மேலும் விசேஷமாகப் பிரவேசித்து, துர்வாஸனைகள் நசித்து சித்தசுத்தியடைந்து, ரிஷிகளின் சிஷ்யர்களாகி பரிபூரணர்களாவோம். ஆகையால் இத்தர்மத்தை மறவாது ஈசுவரனுடைய உபகாரணமாக ஸதா எல்லா நல்ல கார்யங்களையும் ஈசுவரனுடைய கைங்கர்யமாக எல்லோருடைய நன்மைக்காகவும் செய்துகொண்டிருக்கவேண்டும், தியானித்துக்கொண்டிருக்கவேண்டும்.

(6) மற்றொரு தர்மத்தையும் கவனித்தல் வேண்டும். அனேக மதங்களில் ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் மத்தியஸ்தர்கள் இருப்பதாய்த் தெரியவருகிறது. திரிமதஸ்தர்களுள்ளும் குருபரம்பரை ஏற்பட்டிருக்கிறது. பக்தர்கள் அனேகர்கள் பகவானுக்கு மத்தியஸ்தராக ஒருவரை ஏற்படுத்திக் கொண்டு தியானித்து வருகிறார்கள். சக்தியற்ற கண்களுடையவன் நீலக் கண்ணாடியைத் தரிப்பான். ஏனெனில் சூர்யனுடைய பூரண பிரகாசத்தை இக்கண்கள் பார்க்கா. நீலக் கண்ணாடி சூர்யப் பிரகாசத்தின் பலத்தைக் குறைத்து, இவ்வித குறைந்த ஒளியை மாத்திரம் அக்கண்களுக்கு வியாபிக்கச்செய்யும். இவ்விதமே ஈசுவரனுடைய திவ்ய தேஜஸை நாம் பூர்த்தியாய்த் தாங்க முடியாது, இத்தேஜஸைப் பூர்த்தியாக அடைந்து ஸதா வஹித்து ஆனந்திப்பவர்கள் சுக நாரதாதி ரிஷிகளே. இவர்கள் ஈசுவரனைச் சுற்றியிருப்பவர்களாக சாஸ்திரங்களில் வரையப் பட்டிருக்கிறது. இந்த ரிஷிகள் ஈசுவரனுடைய தேஜஸைப் பூர்த்தியாக அடைந்து அதன் வீர்யத்தைக் கொஞ்சம் குறைத்துத் தங்கள் முக்கிய சிஷ்யர்களுக்கு வியாபிக்கச் செய்வார்கள், எவர் எவர் எம்மட்டில் இந்ததேஜஸை யடைந்து முன்னேற்றத்திற்கு வரக்கூடியவர்களோ அவ்வித தேஜஸை ரிஷிகள் தங்கள் வழியாயும் தங்கள் சிஷ்யர்கள் வழியாயும் ராஜயோகிகளுக்கும் பக்தர்களுக்கும் அனுப்பி இப்படிப்பட்டவர்களின் மூலம் இவர்களை விடக் கீழ்ப்படியில் உள்ளவர்களுக்கும், பூதகோடிகளுக்கும், பசு பக்ஷியாதிகள் செடிகள் வஸ்துக்கள் முதலானவைகளுக்கும் வியாபிக்கச் செய்வார்கள். சாதாரணமானவன்கூடத் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் வஸ்துக்களுக்கும் தனது பரிசுத்தத்தையும் தேஜஸையும் தனக்குத் தெரியாமலே வியாபிக்கச் செய்து கொண்டிருப்பான். ஜீவன் தன்னிடமிருந்து ஆத்மதேஜஸை உள்ளினின்று அடைவதுவுமன்றி இவ்விதம் ரிஷிகள் அனுப்பும் திவ்ய தேஜஸையும் அடைந்து கொண்டிருப்பான். இந்த ராசிசக்தி தேஜஸை எல்லாவற்றிற்கும் வியாபிக்கச் செய்து கொண்டிருப்பான்.

ஜீவனது பரிசுத்தத்வமும் பூததயையும் அதிகரிக்க அதிகரிக்க,மேலேமேல் ஏறஏறப் பரிசுத்தக்காற்று அதிகரிப்பதைப் போல் இவன் ஈசுவர தேஜஸை விசேஷமாக அடைந்து கொண்டிருப்பான். அர்ச்சுனன் விசுவரூபத்தைத் தரிசிக்க முடியவில்லை. (கீதை) தேவதைகள் பிரஹ்மாவுடன் கூட வைகுண்டம் செல்ல முடியாமல் போனார்களல்லவா? இவர்கள் திவ்ய தேஜஸைப் பூர்த்தியாய் அடையத் தகுந்த பரிசுத்தத்வம் இல்லாதவர்கள். ஆனாலும் தயாளர்களான ரிஷிகளும் தேவதைகளும் ஸதா திவ்ய தேஜஸை நமக்காகப் பலவிதங்களாய் வியாபிக்கச் செய்கிறார்கள். பக்தி ஞான சக்தி பூததயைகளை நம்மிடம் விருத்தி செய்து பரிசுத்தர்களாய் ஆவதற்கு ஸதா பாடுபடுகிறார்கள். இவ்வித தயாளுக்களான ரிஷிகள் காரணகுருக்கள், ஸத்குருக்கள், பரமகுருக்கள் எனப்படுவார்கள். இவர்கள் முற்றிலும் புலப்படாதவர்கள். ஆகையால் நாம் ரிஷிதர்மமான ஸர்வபூததயையையும் பரிசுத்தத்தையும் ஸதா விருத்தி செய்து கொள்ளவேண்டும். அப்பொழுது திவ்ய தேஜஸ் ஸதா மென்மேலும் விசேஷமாக நம்மிடம் நமக்குத் தெரியாமலே வியாபித்துக் கொண்டிருக்கும்.

இக்காலமானது மிக்க விசித்திரமான காலம். பிரபஞ்சத்தில் பலவிதங்களாயுள்ள மாறுதல்கள் சம்பவிக்கின்றன. ஜனங்களிடம் ஸமபாவம் பரவுகின்றது. ராஜாங்கத்தார் ஜனங்களுக்குப் பெரிய சுதந்தரங்களையும் ஸ்வராஜ்ஜியத்தையும் அளிக்கவும் அனேகமாய் தயாராகின்றனர். திவ்ய திருஷ்டியுள்ள ரிஷிகளும் சிஷ்யர்களும் சொல்வதென்னவெனின்:— "கிருதயுக தர்மமான ஸர்வ பூததயையையும், ஸஹோதர பாவத்தையும் விருத்திப்படுத்த வேண்டியதற்காக ஜகத்குருவான பிரபுவின் வேலைக்குப் பூமியைச் சித்தப்படுத்தல் ஒவ்வொருவனுடையவும் விதியாகும்" நேர்மை, பக்தி,பெரியோர்களிடம் கௌரவம், ஸர்வபூததயை முதலியவைகளை ஜீவர்களிடத்தும் பாலர்களிடமும் பாலிகைகளிடமும் விருத்திபண்ண வேண்டும்.பிரபு வரும் விஷயத்தை எல்

லோருக்கும் தெரிவிக்கவேண்டும். இக்காலம் ரிஷிகள் எல்லோரும் பிரபுவுடன் கூடி அவர்களுடைய திவ்ய தேஜஸை அற்புதமாக ஜீவகோடிகளுக் கனுப்புகிறார்கள். இத்தேஜஸ் எல்லோருக்கும் வியாபிக்கின்றது. ராஜயோகிகள் இத்தேஜஸை விசேஷமாய் அடைவார்கள். ஞானவிருத்தியைச் செய்து கொண்டு மனம் வாக்கு, காயம், முதலியவற்றால் பரோபகாரத்திற்குப் பாடுபடவேண்டும். இதுவே ராஜயோக நிஷ்டை. இந்த நிஷ்டைக்காக இந்த கீழ் எழுதியுள்ள ஆத்ம தர்மங்களையும், மனோ தர்மங்களையும், நன்றாய்த் தெரிந்து கொண்டு எல்லோருக்கும் போதித்துக்கொண்டிருக்க வேண்டும். மனதைப்பற்றிய தர்மங்களை ஒவ்வொருவனும் அறிந்து கொள்ளாவிடில் நன்றாய் ஒழுக்கத்தை சீர்படுத்தல் சாத்தியமாகாது. ஆகையால் நாம் அத்தர்மங்கள் எவை அவைகளைத் தெரிவதின்பிரயோஜன மென்னவென்பதை விசாரிப்போம்.

(தொடரும்)

நஞ்சுண்டப்பா.

[தெலுங்கில் ஆசிரியர் அச்சிட்ட துண்டுப்பத்திரிகையை ஏனங்குடி ராமசந்திர ஐயுடு மொழி பெயர்த்தது.]

அவதாரங்கள்

(16-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏதோ ஓர் தீக்ஷையில் (In a certain Initiation) ஆத்மாவானவன் பரமாத்மாவினிடம் செல்லும் பொழுது அவன் ஓர் பெரிய பரீக்ஷையைக் கடந்து செல்லவேண்டும். அவன் தன்னுடைய ஸகலத்தையும் துறந்து விட்டு, வேறே ஓர் பிடிப்புமில்லாதவனாய் தனியாகவே, வேறே மூன்றுவது மனிதனுடைய ஸகாயத்தை அபேக்ஷியாமல், உபாதி ரஹிதனாய் பகவானிடத்தில் போய் நிற்கவேண்டும். ஆனால் அந்த பரீக்ஷா காலத்தில், தைர்யத்தை யிழந்து, வெளியே யிருக்கிற எதிலாகிலும் பிடிப்பு இருக்கும் பக்ஷத்தி

னும், வெளியே யிருந்து எதனுடைய ஸகாயத்தையாவது கோரும் பக்ஷத்திலும் அப்படிப்பட்ட வேளையில் ஸ்நேகிதனையாவது, உபகாரியையாவது கூப்பிடும் பக்ஷத்திலும் குருவினுடைய ஸகாயத்தை எதிர்பார்க்கும் பக்ஷத்திலும் அவன் அந்தப் பரீக்ஷையில் தவறினவன் என்றே மதிக்க வேண்டும். தனியாகவும் வேறே ஓர் பிடிப்பு மில்லாமலும் எல்லாவற்றையும் உதறி யெறிந்துவிட்டு, தன்னுடைய ஹிருதயத்தில் விளங்குகின்ற பகவானைத் தவிர வேறொருவருடைய ஸகாயத்தையும் அபேக்ஷியாமல் தனியாகவே செல்லவேண்டும். பகவானுடைய ஸ்திதியை யடைவதற்கு முன் ஆத்மாவானது இருக்கவேண்டிய ஸ்திதியானது அக்கதை ரூபமாக பரிபாஷையாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது; கோபிகைகளுடைய ஆடைகள் தான் ஆத்மாவினுடைய உபாதிகள். பகவானை யடைந்து அவரிடத்திலிருந்து ஆடைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன் இருக்க வேண்டிய ஸ்திதியைக் குறிப்பிட்டுங் காட்டுகிறது. அதாவது வேறே ஓர் பிடிப்பு மில்லாமல் உபாதிரஹிதமாயிருக்க வேண்டுமென்பதே. பகவானிடத்திலிருந்து திரும்பவும் ஆடைகளைப் பெற்றுக்கொள்வதானது, ஸகல ஜீவகோடிகளையும் கரைபேற்றுவதற்காக ஆத்மாவானவன் உபாதிகளை மறுபடியும் பெற்றுக்கொள்வதைக் குறிக்கிறது. இது மாதிரி இதே அர்த்தங்களடங்கிய அநேக பரிபாஷையான கதைகளுண்டு. பகவான் கல்கி அவதாரம் பண்ணும் பொழுது, யுத்தத்தில் சண்டை போடுகிறார். தன்னுடைய ஸர்வ ஆயுதங்களையும் உபயோகப்படுத்துகிறார். ஒவ்வொரு ஆயுதமும் அவரையே தோற்கடிக்கச் செய்கிறது. கடைசியில் தன்னுடைய ஆயுதங்கள் எல்லாவற்றையும் யெறிந்துவிட்டு, வெறும் கைகளோடு அவர் சண்டைபோடுகிற வரையில் அவர் ஜயிக்கிறதில்லை. கடைசியில் அவைகளை யெறிந்துவிட்டு வெறும் கைகளோடு சண்டைபோடுகிறபோது தான் அவர் ஜயிக்கிறார். இதற்கும் அதே அர்த்தந் தான்.

அநேக கதைகளுக்குள் இந்தக்கதையை யெடுத்துச் சொல்வானேன் என்றால்—இதைத்தான் இதர மதஸ்தர்களும் ஹிந்துமதத் துவேஷிகளும் எல்லாவற்றைக் காட்டிலும் நிசப்பவும் தூஷணையாக எடுத்துப் பேசுவார்கள். அப்படி நம்முடைய மதத்தைப்பற்றி அவர்கள் தூஷணையாகப் பேசும்பொழுது, ஹிந்துக்களாகிய நாம் நம்முடைய மத உண்மைகளைத் தெரிந்து கொண்டு அவர்களுடைய தப்பு தூஷணைகளை நீக்கிச் சரியான பதில் சொல்வதற்கு யோக்கியதையை ஸம்பாதித்துக் கொள்ளாமல், வாயை மூடிக்கொண்டு சும்மாயிருக்கக் கூடாது.

அவர் ஏழுவயதுக் குழந்தையாயிருக்கும் பொழுது, கோபிகைகளோடு அவர் விளையாடினதைப்பற்றி நாம் பேசுவோம். அவர் காடுகளிலும் நதிதீரங்களிலும் கோபிகைகளோடு எப்படி அவர் அலைந்துதிரிந்து விளையாடினார் என்பதும் அவர் எப்படி திடீரென்று மறைந்து விடுவார் என்பதும் அவர் மறைந்ததும் கோபிகைகள் எப்படி அவரைப் பின் தொடர்ந்து தேடினார்கள் என்பதும் அவரை அவர்கள் மறுபடியும் காணும் வரையில் எப்படி அவருடைய விளையாட்டு மாதிரி அபிநயித்தார்கள் என்பதும பாரதத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. ஏழுவயதுக் குழந்தையாகிய பகவான் கோபிகைகளோடு விளையாடிக் கொண்டிருக்கும் பொழுதே, திடீரென்று இருந்தாற்போல் மறைந்து விடுவார். கொஞ்ச நாழிகைக் கெல்லாம், பக்தர்களிடத்தில் பகவான் திரும்பி வருவது மாதிரியே, தன்னை நேசிக்கிற கோபிகைகளிடத்தில் பகவான் திரும்பவும் வந்துவிடுவார். அதற்குப் பிறகு மிகவும் அற்புதமான ராஸக்ரீடையானது நடக்கிறது. பகவான் செய்த அற்புதமான லீலைகளுக்குள், ராஸக்கிரீடை ஒன்று. அதில் தன்னையே அநேகமாகப் பண்ணிக்கொண்டு, இரண்டு இரண்டு கோபிகைகளுக்கு நடுவிலும் ஒவ்வொரு கிருஷ்ணனாகத் தோன்றுகிறார். ஒவ்வொரு கோபியின் கையிலும் தன் ஒரு கையைக்கோர்த்துக்கொண்டு அற்புதமான ராஸக்கிரீடையைச்செய்தார்.

அற்ப புத்தியுள்ள மனிதர்கள் கிருஷ்ண பகவானைத் தூஷிப்பதற்கு இந்த லீலையையும் ஓர் ஆதாரமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏழுவயதுக் குழந்தை விளையாடுகிற விளையாட்டைப் பார்த்துவிட்டு, அசுத்தமான மனதையுடைய ஜனங்களைத் தவிர, வேறுயார் அதை விகல்பமான புத்தியோடு பாவிப்பார்கள்? பின்னால் இப்படி நேரும் என்று தான், இப்படிப்பட்ட லீலைகளைக் குழந்தைப் பருவத்திலேயே அவர் விளையாடி, அவைகளைக் கொண்டு ஜனங்களுக்குத் தான் கற்பிக்க வேண்டுமென்றிருந்த ஆத்ம தத்வங்களை வெளியிட்டார் என்று தோன்றுகிறது.

இதேமாதிரி மற்றொரு விஷயத்தைப்பற்றி கவனிப்போம். தன்னிடத்தில் விளையாடிக்கொண்டிருந்த கோபிகைகளை ஒருநாள் தான் வனத்தில் பசியால் வருந்தும் பொழுது பக்கத்திலே யாகம் செய்துகொண்டிருந்த ப்ராஹ்மணர்களிடத்தில் சென்று சாப்பிடுவதற்கு அன்னம் வாங்கிவரும்படி யனுப்பினார். அந்த யாக தீக்ஷையைப் பெற்ற ப்ராஹ்மணர்கள் அன்னம் சேஷமாகி விடுமென்று கொடுக்கமாட்டோம் என்று மறுத்து விட்டார்கள். அவர்கள் கொடுக்கமாட்டோம் என்று மறுத்ததும், அவர்களுடைய பாரிகைகள் கொடுக்கிறார்களா, அல்லது மறுத்துவிடுகிறார்களா வென்று பரீக்ஷிப்பதற்கு, அந்த ப்ராஹ்மண ஸ்திரீகளிடத்தில் கோபாலர்களை யனுப்பினார். பகவானை பூர்ண அன்போடு நேசித்த அந்த ஸ்திரீகள் தங்களால் சேகரிக்கக்கூடிய ஆகாரத்தை யெல்லாம் பகவானுக்காகச் சேகரித்துக் கொண்டு அவைகளைத் தங்கள் தங்கள் சிரசின் பேரில் வைத்துக்கொண்டு பகவானிருக்கு மிடத்திற்குக் கூட்டங் கூட்டமாய்ப் புறப்பட்டார்கள். வீடு வாசலையும் குடும்பக் கடமைகளையும் வேலைகளையும் விட்டுவிட்டுப் புறப்பட்டார்கள். எல்லோரும் அவர்களைத் தடுக்கப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் கொஞ்சங்கூடக் கேட்கவில்லை. ஸகோதரர்களும் பர்த்தாக்களும் ஸ்நேகிதர்களும் அவர்களைத் தடுக்க முயன்றார்கள், ஆனால் அவர்களுடைய வார்த்தையை கொஞ்சங்கூட

கேட்கவில்லை. ஸஹோதரர்களும் பர்த்தாக்களும் ஸ்நேகிதர்களும் அவர்களைத் தடுக்க முயன்றார்கள். ஆனால் அவர்களுடைய வார்த்தையை கொஞ்சங்கூட லக்ஷியம் செய்யாமல், பகவானிருக்குமிடத்திற்கு பிடிவாதமாகவே ஆகாரத்தை எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

(தொடரும்)

கோமதீசுவரய்யர்.

விசேஷக் குறிப்புகள்.

சென்ற ஜுலை மீ 23உ கோயில்பட்டியில் தூத்துக்குடி சப்ஜட்ஜ் மகா-ள-ள-ஸ்ரீ C. V. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் திருநெல்வேலி ஜில்லா பிரஹ்மஞானச் சங்கத்தின் கூட்டம் ஒன்று கூடிற்று. அன்றுகாலையில் கோயில்பட்டி வக்கீல் மகா ள ள ஸ்ரீ பகவந்தராயர் அவர்கள் நல் வரவழைப்புக் கூறினார். அக்கிராசனாதிபதி பதிலுரைத்த பிறகு ஸ்ரீமான் குருசாமி தீக்ஷிதர் ஒரு உபன்யாசம் செய்தார். அதன்பின் ஸ்ரீமான் ஆஸ்கார் கெல்லர் வரப்போகிற ஆறாவது ஜாதியாரைப்பற்றி வெகு விமரிசையாய் ஓர் பிரசங்கம் வாசித்தார். இந்திய ஸ்திரீகளை மிக்கசேவலஸ்திதியில் வைத்திருப்பது இந்தியர்களின் மதக் கொள்கைகளினால் என்று அவர் உரைத்தது சபையிலுள்ளோர் சிலருக்கு ரம்மியப்படவில்லை. அதை அக்கிராசனாதிபதி முடிவுரையில் எடுத்துக்காட்டினார். சுமார் 11. 30 மணிக்கு கூட்டம் கலைந்தது. வந்தவர்களுக்காக அமைத்த அடுத்த ஜாகாவில எல்லோரும் கூடி ஜாதிபேதமில்லாமல் பலவர்ணத்தாரும் ஒன்றாய் உட்கார்ந்து போஜனம் செய்தார்கள்.

பிறகு காரியக்கூட்டம் ஒன்று கூடி வருகிறவருஷம் எங்கு கூடுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

உடனே உதயாநக்ஷத்திர சங்கத்தோர் ஓர் அறையில் தனித்துக் கூடிப் பேசினார்கள்.

மாலை 3. 30 மணிக்கு சங்கம் கூடிற்று. ஸ்ரீமான் கே. எஸ். இராமச்சந்திர அய்யர், சுந்திர சர்மா, கோயில்பட்டி முன்சிப் மகா ள ள ஸ்ரீ சங்கரய்யர் அவர்கள், ஸ்ரீமான் பஞ்சாப கேசய்யர் முதலியோர் முறையே பிரசங்கம் செய்து கடைசியாக அக்கிராசனாதிபதியின் முடிவுரையுடன் சங்கம் கலைந்தது.

மகா ள ள ஸ்ரீ Sir. டி. சதாசிவய்யரவர்களை இந்திய தேசத்திற்கு பிரஹ்மஞானத்தை பிரசங்கம் செய்து பரவச் செய்பவராக ஜெனரல் கௌன்சலில் ஏற்படுத்தி நியமித்ததைப்பற்றி சங்கம் எல்லோ

ரும் மிக சந்தோஷ மடைவோம் என்பதிற் சந்தேக மில்லை. இவரைப்போல் இன்னும் நமது நாட்டிற்கு அனேகர் தேவையுளது. தனது தன்மையைச் சுருதாது தேசத்திற்குழைப்பதற்காக முன்வந்திருக்கும் அய்யரவர்கள் நீடூழி வாழ்வாராக.

மிஷ்டர் C W. லெட் பீடாவர்கள் ஆஸ்ட்ரேலியா தேசத்தில் சௌகரியமாயும், திடனுயும் வாழ்கிறார் என்பதைக்கேட்க மிகச்சந்தோஷமடைகிறோம். அவர் பிரஹமஞான விஷயமாய் எழுதியுள்ள நூல்களை மட்டும் இவ்வுலகோர் வாசித்துக் கொண்டு செலுத்துவார்களேயாகில் வெகுசீக்கிரத்தில் துன்பம் என்பதே யில்லாமல் பூலோகமே கைலாசமாகும் என்பதற்கு தடையில்லை.

சென்ற ஜூன்மீ ஸ்ரீமதி மான்வியார்லி அம்மாள் இந்தியாமுழுவதும் சென்று மதுரைக்கு வந்துசேர்ந்தார்கள். உதயநக்ஷத்திர சங்கத்திற்காக உழைத்துவரும் அங்கத்தினர்களில் இந்தம்மாள் ஒருவர். பிறகு அதேமாசக் கடைசியில் இந்த அம்மாள் தனதுதேசமாகிய ப்ரான்ஸுக்கு கப்பலேறிச்சென்றார்கள். இந்தியாவைப்பற்றிய தனது அபிப்பிராயங்களை ஆகஸ்டு மீ த்துக்குறிய 'Brothers of the star' (ப்ரதர்ஸ் அப்திஸ்டார்) என்ற மாதாந்திரசஞ்சிகையில் விமரிசையாக எழுதி யிருக்கின்றனர். உதயநக்ஷத்திர அங்கத்தினர்கள் அதை வாசிக்கவேண்டும்.

பதஞ்சலியாரின் யோக சாஸ்திரம்.

(ஏ. ரெங்கசாமி அய்யர் B.A., B.L.)

பகவான் பதஞ்சலி மகரிஷி அருளிச்செய்த யோக சூத்திரங்கள் ஆறு தரிசனங்களில் ஒன்றாகிய யோக சாஸ்திரத்தைப்பற்றின. அந்தயோக சூத்திரங்கள் ஏற்படு முன் பல யோக நூல்கள் இருந்தன வென்று தெரிகின்றது. அவைகளை அனுசரித்தே பதஞ்சலியார் தம்யோக சூத்திரங்களை இயற்றினர் என்று விளங்குகிறது 1 பாதம், சூத்திரம்) யோகசாஸ்திரத்தின் ஆதிகர்த்தா ஹிரண்யகர்ப்பராவர்.

யோகம் என்றால் சமாதி. அதன் தாதுவுக்குச் சேர்தல் என்று பொருள். ஜீவனானவன் சித்த சுத்தி பெற்று அவித்தை நீங்கி ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்களைத், தன்வசப்படுத்திக் கொண்டு ஆத்மாவுடன் ஒன்று சேர்தல் யோகமாம். இது வேதாந்த சாஸ்திரத்தின் கொள்கையாகும்.

யோக சாஸ்திரத்திலோ, புருஷனானவன் பிரகிருதியை விட்டுப் பிரிந்து சைதன்ய ரூபமாக தன்னுடைய ஸ்வரூபத்தில்நிற்றலே யோகமாம். ஆகையால் யோகத்தின் முடிவு புருஷனுக்கும் பிரகிருதிக்கும் உள்ள ஸம்பந்தமானது அற்று அதனால் ஏற்படும் வியோகம் அல்லது பிரிவாகும். நன்றாய் ஆராயுமிடத்து வேதாந்தசாஸ்திரமும் யோக சாஸ்திரமும் ஒரே தத்துவங்களை வெவ்வேறு விதமாய் விவரிக்கின்றனவே யல்லாது உண்மையில் அவைகள் இரண்டிற்கும் வேறுபாடில்லை.

யோக சாஸ்திரத்தின் பிரயோஜனம் யாது? மனிதர்களில் பெரும்பான்மையோர் ஒருவிஷயத்தைக் கவனித்து அதில் தங்கள் மனதைச் செலுத்த முயலுங் காலத்தில் அந்த விஷயத்தோடு அவர்கள் மனது ஒன்றுகி இதர விஷயங்களை அவர்கள் கவனியாது நிற்பதை நாம் பார்த்திருக்கின்றோம். அந்த நிலையும் யோகத்தின் லக்ஷணத்தைக் காட்டியதாகும். ஜீவர்கள் இவ்வுலகில் ஸ்தாவர வர்க்கத்திலும் புற்பூண்டுகளமைந்த ஓஷதிவர்க்கத்திலும் பிராணி வர்க்கத்திலும் வரிசைக் கிரமமாயும், படிப்படியாயும் புகுந்து அவ்வவர்க்கங்களுள் நிகழ்ந்த அனுபவங்களால் அவர்களுடைய பிரஜ்ஞையானது மென்மேலும் உயர்தர நிலைகளைப்பெற்று கடைசியிற் அவர்கள் மானிடவர்க்கத்தில் பிரவேசிக்கின்றனர். இம்மானிடவர்க்கத்திலும் கீழ் நிலையிலுள்ள நாகரீகமற்ற முரட்டு ஜாதிகளுக்குள் ஜன்மங்கள் எடுத்துப் படிப்படியாய் நாகரீகமுள்ள மேல் ஜாதியோர்களுக்குள் ஜனித்து, அந்தந்த பிறப்புகளுள் நிகழ்ந்த அனுபவங்களால் பற்பல மனோபாவங்களைப் பெற்று ஒழுக்கத்தாலும், ஞானத்தாலும், அன்பாலும், சோபானக் கிரமத்தை ஒத்த உயர்நிலையை படிப்படியாய்ப் பெற்று வருகின்றனர். யோக சாஸ்திரத்தின் பிரயோஜனம் யாதெனில், இவ்வாறு பல்லாயிரம் ஜன்மங்களாய் மானிடர்களாக அவதரித்து மெதுவாகச்சென்று "மோக்ஷம் அல்லது கைவல்லியம்" என்னும் நிலையை அடையும் வழியைக் குறுக்கி அவ்விதமாக பல ஜன்

மங்களில் ஏற்படும் பயனைச் சில ஜன்மங்களில் அடையும்படி செய்வதாகும். ஜீவர்களின் பிரஜ்ஞா சக்தியை எவ்வாறு விரைவில் அபிவிருத்தி செய்யத்தக்கதோ, எவ்வாறு ஸ்தூல சூக்ஷ்ம, அதிசூக்ஷ்ம உலகங்களில் ஜீவர்களுக்குக் கருவிகளாயுள்ள உபாதிகளாகிய ஸ்தூலசூக்ஷ்ம காரண சரீரங்களில் ஜீவர்களுடைய பிரஜ்ஞா சக்தியானது தடையற்று பரிபூரணம் பெற்று பிரகாசிக்கத் தக்கதோ அதற்குரிய முறைகளை யோகசாஸ்திரம் போதிக்கின்றது. உபாதிகள் உயர்வடைந்து ஸத்துவகுணம் மேலிட்டு ரஜஸ் தமோ குணங்கள் உள்ளடங்கி நிற்குங்கால் அவ்வுபாதிகளுள் உலாவும் பிரஜ்ஞையும் உயர்நிலை பெறுகின்றது. செடிகளிலும் விருக்ஷங்களிலும் பிராணிகளிலும் உயர்வுற்ற ஜாதிகளைத் தேர்ந்தெடுத்து முறைமுறையே கலந்து அவைகளினின்று உற்பத்தியாகும் பிரஜைகளில் உயர்வான லக்ஷணங்களுடைய இனங்களைப் பொறுக்கிக் கலந்து இவ்விதம் பல தலைமுறைகளால் தேர்ந்தெடுத்துப் பெருகிடச்செய்திடின், உயர்ந்த ஜாதியைச் சார்ந்த புஷ்பங்களும் கனிவர்க்கங்களும் பிராணிகளும் மனுஷர்களின் முயற்சியால் உற்பவமாவதை நாம் காண்கின்றோம். இதற்கு மேற்றிசைத் தத்துவசாஸ்திரிகள் Artificial Selection என்ற செற்கைப்பரிணாம முறை என்று பெயரிடுகிறார்கள். இது போன்றதுயோகமுறை. இயற்கைப் பரிணாமமாகிய Natural Selection என்னும் வழியாய் வெகுகாலத்தில் அடையத்தக்க குணங்களுடன் கூடிய ஒரு ஸ்வரூபம் சிறு காலத்தில் மனுஷப் பிரயத்தனத்தால் உண்டாகக்கூடும். காலக்கிரமத்தில் மெதுவாக அடையத்தகுந்த கிரமமுக்தியானது யோக அப்பியாஸத்தால் குறைந்த காலத்தில் அடையத்தகும்.

யோகமுறைகளை விசாரிப்பதற்கு முன்னர் அவைகளுக்கு ஆதாரமாயுள்ள தத்துவ சாஸ்திரத்தை நாம் தெரிந்துகொள்ளல் வேண்டும். அத்தத்துவ சாஸ்திரத்திற்கும் வேதாந்தத்தில் பிரதிபாதிக்கப்படும் தத்துவ சாஸ்திரத்

திற்கும் உள்ள போலி வேறுபாடுகளையும் அவைகளுக்குள் ஏற்படும் ஸமரஸ பாவத்தையும் நாம் அறிதல் வேண்டும். யோக சாஸ்திரமானது சாங்கியர்களால் ஒப்புக்கொள்ளப் படும் 25 தத்துவங்களைக் கைக்கொண்டு ஈசுவரனை 26-வது தத்துவமாக எடுத்துக் கூறுகின்றது. இது காரணம் பற்றி சாங்கிய சாஸ்திரத்தை நிரீசுவர சாங்கியமெனவும் யோக சாஸ்திரத்தை ஸேசுவர சாங்கியமெனவும் கூறுவதுண்டு. யோக சாஸ்திரத்தில் ஒப்புக்கொள்ளப்படும் தத்துவங்கள் 2-வது பாதம் 19-வது சூத்திரத்தில் சொல்லப் படுகின்றன. ஸத்வ ரஜஸ தமஸ் என்ற முக்குணங்களும் ஸமமாய் உள்ளது அலிங்கம் அல்லது பிரதானம் அல்லது அவ்யக்தம் என்ற மூலப்பிரகிருதி மூலப்பிரகிருதியினின்று லிங்கம் அல்லது மகத் என்ற புத்தி தத்துவம் வெளிப்படுகின்றது. புத்திதத்துவத்தினிடமிருந்து அகங்கார தத்துவம் உண்டாகிறது. அகங்கார தத்துவத்தின் தாமஸ அம்சத்தினின்று (பஞ்சதன்மாத்திரைகளும்) அதன் ஸாத்விக அம்ஸத்தினின்று ஐந்து ஞானேந்திரியங்களும் மனதும், அதன் ராஜஸ அம்சத்தினின்று ஐந்து கர்மேந்திரியங்களும் விகாரங்களாகத் தோன்றுகின்றன. பஞ்சதன்மாத்திரைகளினின்று பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து மகா பூதங்கள் தோன்றுகின்றன, மேற்சொல்லிய 24 தத்துவங்களுடன் புருஷன், ஈசுவரன் என்ற இரண்டு தத்துவங்களைச் சேர்ந்தது 26 தத்துவங்களாகின்றன.

பிரஹ்மஞான நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கிற லோகங்களையும் அந்தந்த லோகங்களின் அநுபவங்களை அநுபவிப்பதற்குரிய ஜீவர்களின சரீரங்களையும் எடுத்துக்காட்டி அவைகளுடன் யோகம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட விஷயங்களை ஸமரஸ பாவத்துடன் ஒத்துப் பார்க்குமிடத்து மேற்சொல்லிய சாஸ்திரங்கள் எல்லாம் பெரும்பாலும் ஒரே தத்துவங்களையே வெவ்வேறு விதமாய் கூறுகின்றனவென்பது நன்கு விளங்கும். அந்த ஸமரஸபாவமானது அடியிற் கண்ட அட்டவணையில் உதகரிக்கப்பட்டிருக்கிறது,

உலகங்கள்		உலகங்களுக்குரிய தன்மாத்திரைகளும் பூதங்களும்	உலகங்களுக்குரிய சரீரங்கள்
பிரஹமஞான நூல்.	சாஸ்திரீயம்.	சாங்கியம யோகம்.	பிரஹ்ம ஞான நூல்.
1. ஆதி அல்லது மகாபரநிர்வாணம். World of 1st Logas.	கோலோகம்.	மஹா கைலா பிரளயாக்கினி	
2. அனுபாதிகம் அல்லது பர நிர்வாணம். World of 2nd Logas and Monads.	வைகுண்டம்.	பிரளயஜலம்.	
3. ஆத்மம் அல்லது நிர்வாணம். World of 3rd Logas.	ஸத்யலோகம்	ஆகாயம்	ஆத்மா
4. புத்தி.	(1) தபோலோகம் (2) ஜனலோகம்	வாயு	புத்தி
5. மானஸம். (1) சுத்த மானஸம் அல்லது அருப மானசம்.	(1) மகர்லோகம்	தேயு	சுத்த மானஸம் அல்லது அரூப மானஸம் அல்லது காரண சரீரம்.
(2) அசுத்த மானசம் அல்லது அருபமானசம்.	(2) ஸ்வர்லோகம்		அசுத்தமானஸம் அல்லது ரூப மானஸம் அல்லது மானஸசரீரம்.
6. காமம்	புவர்லோகம்	அப்பு	கர்மசரீரம்
7. பூலோகம்	பூலோகம்	பிருதிவி	(1) பிராண சரீரம் (2) ஸ்தூல சரீரம்

அட்டவணை.

உலகங்களுக்குறிய கோசங்கள் வேதாந்தம்:	உபாதிகள் சாஸ்திரீயம்.	தத்துவங்கள் சாஸ்திரீயம்.	உலகங்களுக்குறிய பிரக்ஞா அவஸ்தைகள்.
		பிரதானம் அவியக்தம் மூலப்பிரகிருதி அலிங்கம் புருஷர்களின் ஸ்தானம்	
ஆனந்தமயம்	காரணோபாதி அல்லது காரணசரீரம்.	புத்தி	துரியாதீதம்.
		அகங்காரம்	துரியம்
விக்ஞானமயம்	ஸூக்ஷ்மோபாதி அல்லது ஸூக்ஷ்மசரீரம்.	மனஸ்	ஸுஷுப்தி
மனோமயம்			
			ஸ்வபனம்
பிராணமயம்			
அன்னமயம்	ஸ்தூலோபாதி அல்லது ஸ்தூலசரீரம்		ஜாக்கிரதம்.

பூலோகத்தில் அன்னமய சரீரத்தில் நிகழும் பிரஜ்ஞா அவஸ்தையை ஜாகிரதமென்றும் அதில் பிரதிபிம்பிக்கும் ஜீவாத்மாவை வைசுவாநரன் என்றும், பிராணமய மனோமய கோசங்களில் நிகழும் அவஸ்தையை ஸ்வப்பனமென்றும் அவைகளில் பிரதிபிம்பிக்கும் ஜீவாத்மாவை தைஜஸனென்றும், விஜ்ஞாநமய கோசத்தில் நிகழும் பிரஜ்ஞா அவஸ்தையை ஸுஷுப்தியென்றும் அதில் பிரதிபிம்பிக்கும் ஜீவாத்மாவை பிராஜ்ஞனென்றும் சொல்வதுண்டு. (மாண்டூக்யோபநிஷத்தைப் பார்க்க) இவைகளுக்கும் மேற்பட்டவைகள் துரீயம், துரீயாதீதம் என்ற அவஸ்தைகளாம். பிரஹ்மஞான நூல்களில் உபயோகிக்கப்படும் 'புத்தி' என்ற பதத்தின் தாத்பரியத்திற்கும் சாங்கிய யோக சாஸ்திரங்களில் உபயோகிக்கப்படும் 'புத்தி' என்ற பதத்தின் தாத்பரியத்திற்கும் உள்ள வித்தியாஸம் அறியத்தக்கது. பிரஹ்மஞான நூல்களில் வழங்கும் 'காரண சரீரம்' என்ற பதத்தின் தாத்பரியத்திற்கும் வேதாந்த சாஸ்திரத்தில் பிரயோகிக்கும் 'காரண சரீரம்' அல்லது "காரணோபாதி" என்ற பதத்தின் தாத்பரியத்திற்குமுள்ள வேறுபாடு கவனிக்கற்பாலது.

யோக சாஸ்திரத்தின் நோக்கத்திற்கும் கருத்திற்கும் இசைய, பிரபஞ்சத்தையும் அதில் விளங்கும் சைதன்னியத்தையும் பிரகிருதி புருஷர்களாகவும் அல்லது திருச்ய திருஷ்டாக்களாகவும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. பிரபஞ்சத்திற்றோன்றும் பிரஜ்ஞா சக்தியானது பிரகிருதி சம்மந்தமில்லாமல் தோன்ற இயலாதாகையால் அது பிரகிருதியின் சக்தியென்றும் புருஷனின் ஸாமீப்யத்தால் அச்சக்தி பிரகிருதிக்கு ஏற்படுகிறதென்றும் சொல்லப்படுகிறது. ஆகையால் புத்தியும், அகங்காரமும், மனஸும் பிரகிருதியின் விகாரங்களாகவே கூறப்படுகின்றன. புருஷனானவன் அனுபாதகம் என்று சொல்லப்பட்ட உபாதியற்ற உலகத்தில் இருக்குங் காலத்தில் அவன் சாக்ஷியாகவே நிற்கின்றான். அந்த உலகத்திற்குக்கீழுள்ள உலகங்களில்

ஏற்பட்ட உபாதிகளில் புருஷனானவன் பிரதிபிம்பிக்குங் கால், தான் அறிகிறதாகவும், இச்சிக்கிறதாகவும, செய்கிற தாகவும் கருதுகிறான், சாங்கிய யோக சாஸ்திரங்களின் பிர காரம் அறிகிறதாகவும், இச்சிக்கிறதாகவும், செய்கிறதாக வும், பாவிக்கப்படும் ஞானம், இச்சை, கிரியை என்ற சக்தி கள பிரகிருதியின் குணங்களினால் ஏற்படுகின்றனவேயல்லா து, புருஷனுடைய சக்திகள் அல்ல. அவைகளுக்கும் புருஷ னுக்கும் சம்மந்தமில்லை. அத்வைத வேதாந்த சாஸ்திரப்பிர காரம் இவைகளெல்லாம் ஜீவாத்மாவின் சக்திகளேயல்லாது பிரகிருதியின் சக்திகள் அல்ல. ஏனென்றால் ஜீவாத்மாவான வன் ஈசுவரன்போல ஸத்சித் ஆனந்த ஸ்வரூபியாயிருக்கி றான். உலகத்தில் விளங்கும் சக்திகளெல்லாம் ஆத்மாவின் சக்திகளேயல்லாது பிரகிருதியின் சக்திகள் அல்ல. பிரகி ருதி ஜடமானது, சக்தியற்றது.

பிரஹ்ம ஞான நூல்களில் விவரித்திருக்கிற பிரகாரம் பரிணாமக்கிரமத்தை எடுத்துக் கூறுவோம். புருஷர்கள் அல்லது ஜீவாத்மாக்களின் சக்திகள் அநுபாதக லோகத்தி ற்குக் கீழ்பட்ட ஐந்து லோகங்களில் பிரதிபிம்பிக்கின்றன. ஜீவாத்மாவின் ஸத்சித் ஆனந்தம் என்கிற சக்திகள் ஆத்மா வாகவும், புத்தியாகவும், சுத்த மனஸாகவும், ஆகாய, வாயு, தேவு லோகத்தின் மேல்பாகமாகிய அரூபமானஸம இந்த லோகங்களில் முறைமுறையே பிரதிபிம்பித்து அத ற்கு, பிறகு மறுபடியும் திரிலோகமென்கிற ஸ்வர், புவர், பூலோகங்களில் அசுத்த மனஸ் காமகிரியையாகவும் பிரதி பிம்பிக்கின்றன.

அநுபாதக லோகத்திலிருக்கும் புருஷர்கள் அல்லது ஜீவாத்மாக்கள் பலராவர். அவர்கள ஒவ்வொருவரும் ஈசுவ ரன் அல்லது பரமாத்மாவின் அம்சர்களாயிருக்கின்றனர். உ பநிஷத்வாக்கியப் பிரகாரம் அவர்கள் ஒவ்வொருவரும் ஈசு வரனாகிய ஜ்வாலையினின்று வெளிக்கிளம்பின நெருப்புப் பொறிகள் போல் ஆவர். ஆகையால் ஈசுவரனைப் போல் ஜ்வா லையாகுந் தன்மை அவர்களிடத்திலுளது, அவர்கள் பிரஹ்

மஞான நூல்களில் Monads என்று சொல்லப்படுகிறார்கள். அவர்கள் உறைவிடமாகிய அந்த அனுபாதக லோகத்தில் ஈசுவரனைப்போல் பூரண சக்தியுடன் கூடினவர்கள். ஆனால் அவர்கள் பரிணாமக்கிரமம் ஆரம்பிக்கும் காலத்தில அந்த லோகத்திற்குக் கீழுள்ள ஐந்து லோகங்களிலும் சக்தியற்றவர்களாய் இருக்கின்றனர். அந்தலோகங்கள் அந்த லோகங்களின் சம்பந்தப்பட்ட பூதங்களால் இந்த வியாஸத்தில் குறிக்கப்படும். அதாவது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயலோகங்கள் எனப்படும் ஈசுவரனே எல்லா லோகங்களிலும் பூர்ணமான சக்தியுள்ளவர். பரிணாமக்கிரமத்தின்கருத்து யாதெனில், ஒவ்வொரு ஜீவாத்மாவும பரிணாம அபராந்தத்தில் ஈசுவரனைப்போல பூரண சக்தி யுள்ளவராக ஆகவேண்டுவதே. ஜீவாத்மாவானவன் பரிணாமக்கிரமம் ஆரம்பிக்கும் காலத்தில் அனுபாதக லோகத்திற்குக் கீழுள்ள பஞ்ச மகா பூதங்களடங்கிய உலகங்களில் பிரவேசிக்கும் பொழுது ஆகாய லோகத்தில் ஒரு ஆகாய அணுவையும் வாயு லோகத்தில் ஒரு வாயு அணுவையும், தேயு லோகத்தில் ஒரு தேயு அணுவையும ஆரம்ப உபாதிகளாகக் கொண்டு ஆத்ம, புத்தி, மனஸ் என்ற மூன்று சக்திகளுடன் விளங்குகின்றான்.

(உலகங்களை மேல் கீழ் என்று சொல்வது உண்மையில் சரியல்ல. உலகங்களெல்லாம் 'ஓதப்புரோதமாய்' ஒன்றில் மற்றொன்று ஊடுருவி நிற்கின்றன.)

ஆத்மாவினிடத்தில் ஆனந்தம் என்ற இச்சா சக்தியும், புத்தியினிடத்தில் சித் என்ற ஞான சக்தியும், மனஸினிடத்தில் ஸத் என்ற கிரியா சக்தியும் விசேஷமாய் வெளிப்படுகின்றன. 'விசேஷமாய்' என்று சொல்வதற்குக் காரணம் யாதெனில், ஒரு சக்தி மற்ற இரண்டு சக்திகளின் சம்பந்தமின்றி, தனித்திருப்பதில்லை. ஒரு சக்தி விசேஷமாயிருப்பின், மற்ற இரண்டு சக்திகளும அதற்குப் பின்னடங்கி நின்றாலும் அதோடு சேர்ந்து இருக்கின்றன; ஜீவாத்மாவானவன் இவ்வாறு ஆத்ம, புத்தி, மனஸ் என்ற

மூன்று சக்திகளோடு கூடினவனுப் தேயு லோகத்தின் சூக்ஷ்மபாகமாகிய மகர்லோகத்தில் சில பூதவர்க்கங்களில் (Firs Elemental Kingdom) பற்பல அனுபவங்களை அடைந்து அதற்குப் பிறகு அதே லோகத்தின் ஸ்தூல பாகமாகிய ஸ்வர்க்க லோகத்தில் உயர்ந்த அணுக்கூட்டத்தை (a molecule of tle Lower mental world) அந்த லோகத்திற்குரிய உபாதியாகக் கைக்கொள்ளுகிறான்; அந்த ஸ்வர்க்க லோகத்திலுளள சில பூதவர்க்கங்களில் (Second Elemental Kingdom) பிரவேசித்து பற்பல அனுபவங்களை அடைந்து அபபு அல்லது புவர் லோகத்தின் ஒரு அணுவை அந்த லோகத்திற்குரிய உபாதியாக அடைந்து அந்த லோகத்திலுள்ள சில பூதவர்க்கங்களில் (Third Elemental Kingdom) பிரவேசித்து அந்த வர்க்கங்களுக்குரிய அனுபவங்களை அடைந்து அதின்பிறகு பூலோகததில் ஒரு பிருதிவி அணுவை இப்பூலோகத்திற்குரிய உபாதியாகக் கைப்பற்றி ஸ்தாவர வர்க்கத்தில் (Mineral Kingdom) பிரவேசிக்கிறான். இவ்வாறு ஜீவாத்மாவால் ஐந்து உலகங்களினின்றும் முறைமுறையே ஸ்வீகரித்துக் கொள்ளப்பட்ட ஆகாய, வாயு, தேயு, அப்பு, பிருதிவி நித்தியாணுக்கள் (permanent atoms) பரிணாமக்கிரமம் முடியும்வரை இவனை விட்டுப் பிரியாமல் நிற்கின்றன. மனிதவர்க்கத்தில் ஜீவனானவன் திரிலோகியாயிருந்து பூ புவர்ஸ்வா லோகங்களில் ஜன்மங்கள் தோறும் அவன் எடுக்கும் தேகங்களெல்லாம் மேற்சொல்லிய அந்தந்த லோக அணுக்களை ஆதாரமாகக் கொண்டு நிர்மாணம் செய்யப்படுகின்றன. ஸ்தூல சரீரமும் பிராணமய சரீரமும் பிருதிவி நித்தியாணுவைத் தழுவி காலதேசங்களுக்குத் தக்கவாறு ஜன்மங்கள்தோறும் நூதனமாக ஏற்பட்டபோதிலும் ஒவ்வொரு ஜன்மத்திலும் அந்த ஸ்தூல பிராணமய தேகங்கள் மூலமாய் ஏற்பட்ட அனுபவங்கள் எல்லாம் அந்தபிருதிவி நித்தியாணுவில் (physical permanent atom) வாசனைகளாக உள்ளடங்கி நிற்கின்றன.

(தொடரும்.)

'பிரஹ்ம ஞான எண்ணங்கள்.'

பிரஹ்மஞான தத்துவங்கள் 1875 ஹு முதற்கொண்டு உலகின்கண் அனேகபுஸ்தகங்கள், உபந்நியாசங்கள், சிறு பிரசுரங்கள் மூலமாக வியாபித்து ஒவ்வொரு முக்கியமான தேசங்களிலும் அங்கத்தினர்களை சேர்த்து சங்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. அத்தத்துவங்களை அறிவதிலேயே இதுவரையில் காலம் சென்றிருக்கிறது போதும். கஷ்டமார்க்கமாகிய அநுஷ்டானங்களை பெரும்பான்மையோர் கைப்பிடிக்கவில்லை. செய்கைகளினாலேயே ஒருவரைநாம் நிதானிப்போமாதலின் பிரஹ்மஞான சபையின் அங்கத்தினராகிய நம்மை நமது செய்கைகளினாலேயே உலகம் மதிக்கும் என்பதை ஒவ்வொரு அங்கத்தினரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

உபயோகமில்லாமல் கிழிந்துபோன பழய உடைகளை அணிந்துதிரியும் குடுகுடுப்பாண்டிபோல் நாம் பழய எண்ணங்களையும் விஷயங்களையும் சொல்லிக்கொண்டு திரிந்தால் உபயோகமில்லை. ஒவ்வொரு விஷயங்களிலும் புதிதாக நம் அறிவுக்கு எட்டினவரையும் ஆராய்ந்துபார்த்து உலகிற்கு வெளியிடவேண்டும். அப்படிமுடியாத விஷயத்தில் புதிதாக என்ன சொல்லுகிறார்களோ அதையாவது அறிந்து சொல்லவேண்டியது நமது கடமை.

வெகுஜனங்கள் தமது சொந்த அறிவை உபயோகப் படுத்தாமல் பிறர் அறிவையும் அல்லது தன்முன்னோருடைய அறிவையுமே உபயோகப் படுத்துகிறார்கள். சிறந்தகாரணங்களோடு ஏற்படுத்திய சில ஒழுக்கங்களை யெல்லாம் அக்காரணங்களை மறந்து காலத்தினால் மாறுதலடைந்திருப்பதை யறியாமல் குறங்குப்பிடியாய் நடத்திவருவது சகஜமாயிருக்கிறது. ஈசுவராம்சம் நம் ஒவ்வொருவரிடத்திலுமிருக்கிறதென்றறிந்த பிரஹ்மஞான சபையின் அங்க

த்தினர்கள் அவ்வாறு செய்தல் கூடாது. ஈசுவரசங்கல்பத்தை யறிந்து அதற்கிணங்க நமது செய்கைகளை அவ்வக் காலத்திற்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டிய தவசியம்.

நாம் எத்தனையோ ஜன்மங்கள் எடுத்திருக்கிறோம், இனியும் எத்தனையோ ஜன்மங்கள் எடுக்கப்போகிறோம் என்ற விஷயத்தை இப்பாரத கண்டத்தில் பிறந்த ஒவ்வொருவரும் அறிந்திருந்தாலும் எத்தனை பேருக்கு தம்முந்தின ஜன்மங்களை அறியக்கூடிய சக்தியிருக்கின்றது? நமதுமுன் ஜன்மங்களை பிறர்சொல்லி அறிவது, நமக்காகப்பிறர் உண்பது போலாகும். நாமே அறிந்துகொள்வதற்கு வெகுசீக்கிரம் வழிகளைத்தெரிந்து அனுஷ்டிப்பதற்கு ஒவ்வொருவரும் முயலவேண்டும். மனது, ஆசை, சரீரம் ஆகிய மூன்றும் நமக்குஏற்பட்ட கருவிகளென்று அறிந்து அவைகளை நமக்கு கீழ்ப்படியப் பழக்குகிற வர்களுக்கு முன்ஜன்மங்களை அறிய சக்தியுண்டாகும் என்பதில் சந்தேக மில்லை.

விதைப்பது விளையும் என்ற உண்மையைத்தான் காமம் என்று சொல்லுகிறது. இவ்வுண்மையை அறிந்தும் மனதினாலும், சொல்லினாலும், செய்கைகளினாலும் எவ்வெவ்விதமான விதைகளை உலகத்தோர் விதைக்கிறார்கள் என்பதை நினைக்க மிக்க ஆச்சரியம் உண்டாகிறது. தன்விஷயத்தில் மாத்திரம் கர்மம் பாதிக்காதென்ற ஒரு பொய்யெண்ணமும், சிறுவர்கள் சாக்குப்போக்குச் சொல்லி தப்பித்துக் கொள்வதுபோல நாமும் தப்பித்து விடலாமென்ற மூட எண்ணமுமன்றோ அப்படி எண்ணுவதற்கு காரணம்?

ஒருமாணாக்கன் தனது வகுப்புக்குள்ள பாடங்களைப்படித்துத் தெரிந்து கொள்ளாமல் இருப்பானேயாகில் எப்படி மேல்வகுப்புக்குச் செல்லமுடியாதோ அதுபோல ஓர் ஜன்மத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டியதை அறியாவிட்டால் மேற்செல்ல முடியாது. சிறியவர்களெல்லாம் மேல் வகுத்புக்குச்செல்ல கீழ்வகுப்பில் தங்கும் மாணாக்

கன் அப்பள்ளிக்கூடத்தில் படிக்க சங்கோசப்பட்டு, அப்ப ள்ளியை விட்டுப் போவதுபோல், ஜன்மத்தின்பலனை உப யோகிக்காதவர்கள் வெளிச்சென்று தலைமேரிடும். இக்கா லத்தில் நாகரீகமான ஜனங்களுடன் சேராத குடிகளெல் லாம் அவ்வினத்தோராவர். அக்கதியை நமக்கும் வரக்கூ டாதென்ற வெண்ணத்தை நாம் உறுதியாய்க் கொள்ள வேண்டும்.

ஈசுவரனை மனிதனால் அறிய முடியுமா என்று ஓர் சந் தேகம் சில மனதிற்கு உண்டாகும் ஐம்புலன்களினால் எப் படி நாம் உலகின்பாலுள்ள வெளிச்சம், சப்தம், சுவை முத லியவற்றை அறிகிறோமோ அதுபோலபரமாத்மாவை நாம் அறிவதற்கு நம்மிடத்தில் யாதுளது என்ற கேள்விக்கு, நான் நான் என்று சொல்வது ஓர் ஆத்மாவாதலின் அவ்வா த்மாவிற்கு பரமர்த்மாவை அறிய சக்தியுண்டு என்று விடை கூறலாம். இது வைரத்தைத் வைரமே வெட்டும் என்ற நியா யம் பொருந்தியது. மனிதன் ஓர் ஆத்மா வென்றதை அறி யாதவர்களுக்கு ஈசுவரனாகிய பரமாத்மாவை அறிய முடி யாது என்ற எண்ணம் மேனாட்டில் பெரும்பாலும் ஏற்ப ட்டிருந்தது பிரஹ்ம ஞான தத்துவங்கள் பரவினவிடமெல் லாம் அவ்வெண்ணம் மாறிவிட்டது.

பிரஹ்ம ஞான சபையின் அங்கத்தினர்கள் கொண்டி ருக்கும் முதல் கோளானது சகோதரத்வம் என்று யாவரும் அறிவார்கள். அதாவது உலகிலுள்ள மாணிடர்யாவரும் ஓரே பிதாவாகிய ஈசுவரனுடைய குழந்தைகளாதலின் அனைவரும் சகோதரர்களாகிறார்களென்பதே, ஆகையினால் அங்கத்தினர் யாவரும் இச்சகோதரத்வத்துக்கேற்ப இதர ர்களுக்கு தம்மால் கூடிய சகாயத்தைக்கொடுத்துதவி செய் வதிலேயே கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும். அங்ஙன மின்றி வாங்கிக் கொள்வதற்கு மாத்திரம் சகோதரத்வம் பாராட்டிக்கொள்வது மிகக்கேவலமாகும். இவ்வொரு

வெண்ணத்தை மாத்திரம் நமது அங்கத்தினர்கள் கைக்கொள்வார்களேயானால் நமது சபையின் உபயோகமானது பதின் மடங்கு சீக்கிரத்தில் அதிகரிக்கும்.

பிரகாசமான வெளிச்சத்தில் நிற்பவனை யாவரும் கவனித்துப் பார்ப்பதுபோல பிரஹ்ம ஞான வெளிச்சத்தில் நிற்கும் நம்மை உலகத்தோர் நன்றாய் கவனிக்கிறார்கள். ஆகையினால் அங்கத்தினர் ஒவ்வொருவரும், தமது சொல்லையும் நடையையும் வெகு ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டும். நாம் கோணலாய் நடப்போமேயாகில் அப்பழியை உலகத்தோர் பிரஹ்மஞான சபைக்குச் சேர்கிறார்கள். ஆகையால் பிரஹ்மஞான சபையின் கௌரவம் நம்மையிலிருப்பதினால் நாம் இதர மனிதர்களைக் காட்டிலும் வெகு ஜாக்கிரதையாகப் பேசவும் ஒழுகவும் வேண்டுமென்று ஏற்படுகிறது. பிரஹ்மஞான தத்துவங்களை, சொற்களினாலல்லாமல், நமது நடத்தையினால் உலகோர்க்குக் காட்டவேண்டும். சகோதரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லியவாறு நம்மிடத்தில் ஒரு துளி அழுக்குக் கூட இருக்கலாகாது.

நமது பிரசிடெண்டு அன்னிபெஸண்டு அம்மையவர்கள் சில மாதங்கள் இவ்விடமில்லாமலிருந்து திரும்பிச் சென்ற மாதம் வந்தது, விளக்கில் ஜ்வாலை நீங்கி திரும்பி வந்ததுபோல் விளங்கின்றது. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றது போல ஜ்வாலை வெளிச்சம் இருக்கும்பொழுதே நாம் யாவற்றையும் நோக்கி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். மறைந்த பிறகு தான் ஓகோ! தேவையன்றோவென்று பாமரஜனங்கள் உணருகிறார்கள். பிரஹ்மஞானத்தை அறிய விரும்புகிற நாம் அங்ஙனம் செய்யாது உள்ளவற்றை அவ்வாறறிந்து கொள்ளவேண்டும். மெய்யுணர்வினையுடையாரது நல்ல தாள்களைத் தொழாராயின் எல்லா நூல்களையுங்கற்றவர்க்கு அக்கல்வியறிவானாய பயன் யாது?

உனது சிநேகிதர்கள் யார் என்று கூறினால் நீ எப்பேர்பட்டவனென்று நான் சொல்லுகிறேன்" என்ற ஆங்கிலத்தில் ஓர் பழமொழியுண்டு. அதுபோலவே நமது சரீரமும் நம்முடைய எண்ணங்களுக் கிணங்க மாறுதலடைந்து அவைகளைப்புலன் படுத்துகின்றது, 'அகத்தினழகு முகத்தில்' என்றும் சொல்வதுண்டு. காவி வஸ்திரம் தரித்துக் கொண்டிருந்த போதிலும் முகத்தைப் பார்த்த வளவிலே போலி சன்யாசி யென்று உணர்வது அதனால் தான். ஆகவே மெய்யுணர்வுள்ள ஒருவரை நாம் பேசுவதனால் கூடவமாற்ற முடியாது: உலககுரு வந்தரேயானால் அவர்முன் நமது அகத்தை எப்படி ஒளித்துக் கொள்வது? வெகுஜனங்கள் உலககுரு வரப்போகிறார் வரப்போகிறார் என்று தாமே சொல்லித்திருந்து கொண்டிருந்தபோதிலும் அவர் உண்மையாய் வந்தவுடன் அவர் முன் நிற்க முடியாதவர்களாய் ஓடி ஒளிந்து கொள்வார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

நாகரீகமுள்ள ஒருவன் தனது கெடியாரத்தை நோக்கி இனியும் சற்று நேரத்தில் மணி அடிக்கப்போகிறது என்று சொல்ல, சிறிதுநேரம் கழிந்தவுடன் அப்படியே மணியடிப்பதைக் கேட்குமொரு அறிவிற் சிறியோன் மற்றவன் மணி அடிப்பதற்கு முன் எப்படி சரியாய்ச் சொன்னான் என்று மயங்குகிறானே அதுபோலவே உலககுரு ஒருவர் கூடிய சீக்கிரத்தில் வரப்போகிறார் என்று சொல்லுவது சிலருக்கு மயக்கத்தைக் கொடுக்கிறது. கெடியாரத்தின் உண்மையைத் தெரிந்தவனுக்கு எப்படி இந்த நேரத்தில் மணி அடிக்குமென்று தெரியுமோ அதுபோல உலக சரீரத்தின் உண்மையை அறிந்தவர்கள் உலககுரு வரவேண்டிய காலம் நெருங்கிவிட்டதென்று அறிகிறார்கள்.

M. S. S.

"இறந்தகாலவுணர்ச்சி"

(M. S. சுந்தரசர்மா B. A.)

இறந்த காலத்தில் நடைபெற்றவைகளெல்லாம் மீண்டு அறியவொண்ணாது அழிந்துவிட்டனவென்று நினைப்பது சரியல்ல. நாம் அவைகளை அறிந்து கொள்வதற்கு ஒரு வழியுண்டு.

'அவுட்' வாணம் விடுவதை சற்று தூரத்திலிருந்து பார்த்தால் அவ்வாணம் தெரித்து விழுவதை நாம் பார்த்த பிறகுதான் அது வெடித்த சப்தம் நமது செவிக்கு கேட்கிறது. அதுபோலவே வண்ணான் துறைக்குச் சென்று சற்று தூரத்திலிருந்து அவன் துவைப்பதை கவனித்துப் பார்ப்போமேயாகில் அவன் துணிகளை உயரத் தூக்கும் பொழுதுதான் அறைபட்ட சப்தம் நமக்கு கேட்கிறது. இதற்கு காரணமென்னவென்றால், சப்தமென்பது ஓரிடத்தில் உண்டாகி மற்றோரிடத்திற்குச் செல்ல நேரம் பிடிக்கிறது. சாஸ்திர ஆராய்ச்சி செய்தவர்கள் சப்தமானது ஒரு வினாடியில் சுமார் ஆயிரத்து நூறு அடிகள் செல்லுகிறதென்று கணக்கிட் டிருக்கின்றார்கள்.

இது போலவே வெளிச்சமும் ஓரிடமிருந்து மற்றதோரிடத்திற்குச் செல்ல நேரமாகிறதென்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் வெளிச்சமானது நம்பக்கூடாத அதிவேகமாகச் செல்லுகின்றது. ஒரு வினாடியில் நமது பூமியை ஏழுதரம் சுற்றிவர சக்தியுள்ளது. அதாவது ஒரு வினாடியில் 186000 மயில் தூரம் செல்லுகின்றது இவ்வளவு வேகமாய் செல்லுகிறதென்பதை வானசாஸ்திரிகள் தூரதிருஷ்டிக் கண்ணாடியை கண்டுபிடித்த பிறகு பிரஹஸ்பதியென்ற கிரஹத்தினது ஒரு சந்திரனுடைய கிரஹணத்தின் கணித்தநேரமும், பார்வையிட்ட நேரமும் ஆறுமாதத்திற்கு பிறகு 16 நிமிஷ காலதாமதமாய் நடப்

பதினாலும், ஆறு மாதத்திற்கு பிறகு பிரஹஸ்பதிக்கும் பூமிக்குமுள்ள தூரம், சூரியனைச் சுற்றிவரும் பூமிப்பாதையின் குறுக்கோட்டத்தின் அளவேயாதலாலும் அக்குறுக் கோட்டத்தை வெளிச்சம் தாண்டிவருவதற்கு 16 நிமிஷ காலம் செல்லுகிறதென்று அறிந்து அதிலிருந்து ஒரு விநாடிக்கு 186000 மயில் தூரம் வெளிச்சம் ஓடுகிறதென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

நமது சந்திரனிடத்திலிருந்து நமக்கு வெளிச்சம் வருவதற்கு ஒன்றேகால் விநாடி செல்கின்றது. சூரியனிடத்திலிருந்து நமக்கு வெளிச்சம் வருவதற்கு எட்டு நிமிஷங்களாகுகிறது. அதாவது சூரியன் 8×60×186000 மயில் தூரத்திலிருப்பதினால்.

ஆகையால் சூரியன் உதயமானவுடன் நாம் பார்க்கவில்லை. உதயமாகி எட்டு நிமிஷங்கள் கிரமித்துதான் நமக்கு உதயமாகிறதுபோல் தோன்றுகிறது.

சூரியனிருக்குமிடமிருந்து ஒரு மனிதன் கூறிய கண்களோடு நமது பூமியை பார்ப்பானேயாகில் எட்டு நிமிஷங்களுக்கு முன் எப்படி இருந்ததோ அப்படித்தான் பார்க்க இயலும்.

சூரியனுக்கு அப்பால் வெகு அதிக தூரத்திலுள்ளது நக்ஷத்திரங்கள் யாவும். பூமிக்கு வெகு அருகேயுள்ளதென்ற நக்ஷத்திரத்திலிருந்து வெளிச்சம் நமக்கு வருவதற்கு மூன்று வருஷங்கள் ஆகின்றன. ஆகையினால் இந்த விநாடியில் அந்த நக்ஷத்திரம் அழியுமேயானால் நமக்கு மூன்று வருஷம் கிரமித்த பிற்பாடுதான் அந்த நக்ஷத்திரம் அழிந்துவிட்டதென்று பார்ககமுடியும். அதுபோலவே அந்த நக்ஷத்திரத்தில் ஒருவன் இருந்து தக்ஷணத்தில் பூமியைப் பார்ப்பானேயாகில் தக்ஷணத்தில் பூமியில் நடக்கிறதைப் பார்க்காமல் மூன்று வருஷத்திற்கு முன்பு நடந்தவைகளையே பார்க்கமுடியும். ஏனெனில் தக்ஷணத்தில் நடப்பனவற்றின் தோற்றம் இங்கிருந்து அவ்விடம் செல்ல மூன்று வருஷங்கள் செல்லுமாதலின்.

இனியும் சில நக்ஷத்திரங்கள் மிகவும் அதிக தூலையி லிருப்பதினால் அவைகளிலிருந்து வெளிச்சம் வருவதற்கு பத்து வருஷங்களோ, நூறு வருஷங்களோ, ஆயிரவருஷங்களோ, அல்லது பதினாயிர வருஷங்களோ அந்தந்த நக்ஷத்திரத்தின் தூலையினால் ஆகின்றது. சில நக்ஷத்திரங்களிலிருந்து வெளிச்சம் புறப்பட்டு வினாடிக்கு 186000 மைலில் வேகமாய் ஓடியும், நமக்கு இனியும் வரவில்லை வயன்றெல்லாம் வான சாஸ்திர ஆராய்ச்சியால் நாம் அறியலாம்.

இந்த வினாடியில் ஒருவன் ஆயிர வருஷ தூரமுள்ள ஒரு நக்ஷத்திரத்திலிருந்து பூமியைப் பார்ப்பானேயாகில் பூமியில் இப்பொழுது நடப்பதைப் பாராமல் ஆயிர வருஷங்களுக்கு முன் நடந்தவைகளையே பார்ப்பான். ஏனெனில் ஆயிர வருஷங்களுக்கு முன் நடந்தவையின் தோற்றம் அவ்விடம் இப்பொழுதுதான் போய்ச் சேறும்.

ஆகையால் பூமியில் பதினாயிரம் வருஷங்களுக்கு முன் நடந்ததைப் பார்க்க இந்தக்ஷணத்தில் பதினாயிர வருஷ தூரமுள்ள ஒரு நக்ஷத்திரத்தி லுள்ளவனுக்கு முடியும். (ஒரு வருஷ தூரமாவது, வெளிச்சம் ஒரு வருஷத்தில் செல்லக்கூடிய தூரம்)

நாம் நம்மை இந்த வினாடியில் அவ்வளவு தூரம் கொண்டுபோக முடியுமேயானால் நாமும் அப்படி முன்பு நடந்தவைகளை பார்க்கலாம். ஆனால் அதிவேகமாய்ச் செல்லும் வெளிச்சத்திற்கே பதினாயிரம வருஷம் வேண்டுமென்றால் நாம் எங்ஙனம இந்த வினாடியில் அவ்வளவு தூரம் செல்ல முடியுமென்று யோசனை செய்யலாம். ஆமாம அப்படி நினைப்பது சரிதான. நம்மால போகமுடியாது. ஆனால ஒன்று செய்ய முடியும்.

நமது பிரக்ஞை சாதாரணமாக நம்முடைய சரீரத்திலேயே பொருந்தியுளது. அவ்வாறு சரீரததில் பொருந்தாமல் வேறு விதத்தில் அறியும சக்தியையுடைய தென்பதை முன்னறிக்கையாயுள்ள சுவப்பனங்களைக் கண்டவர்

கள் அறிவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நமது பிரக்ஞையை ஈசுவரனது பிரக்ஞையோடு பொருத்த முடியுமென்று எளிதில் அறிவார்கள்.

ஈசுவரனே எங்கும் வியாபித்துளான். ஆயிரம், பதினாயிரமல்ல அதற்கப்பாலுள்ள எண்ணிக்கைகள் கொண்ட வருஷங்களின் தூரமுள்ள விடங்களிலும் வியாபித்திருக்கிறான். ஆகையினால் நமது பிரக்ஞையை அவனுடைய பிரக்ஞையோடு பொருத்தவல்லோமாயின் எவ்வளவு தூரத்திலிருந்தும் நமது பிரக்ஞை இதே வினாடியில் உலகத்தை அறிய முடியும்.

இவ்வறிவு ஏற்பட்டவர்களுக்கு நாம் வசிக்கும் பூமியின் இறந்த காலமெல்லாம் இக்காலமாய் விளங்கும்.

பிரஹ்மஞானத்தின் பிரதம தத்துவங்கள். *

(ஏ. ரெங்கசாமி அய்யரால் மொழி பெயர்த்தது.)

அதிகாரம் 1.

புருஷப்பிருகிருதி பரிணாமம்.

பிரஹ்மஞானத்தை நன்கு அறியவேண்டுமாகில் நவீன சாஸ்திரங்களில் விரிவான பொதுப்பழக்கம் இன்றியமையாத சாதனமாகும். ஏனெனில் அந்த சாஸ்திரங்களின் விஷயங்கள் சிருஷ்டியில் நிகழும் சங்கதிகளைப் பற்றியவாம் அந்த சங்கதிகளை அவயவப்படுத்தலால் சிருஷ்டியில் விளங்கும் தர்மங்களாகிய விதிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. பிரஹ்மஞானத்திலும் அதே சங்கதிகள் விஷயமாகின்றன, அவைகளிரண்டினுடைய பாகுபாடுகள் முறைமுறையே வெவ்வேறு விதமாய் அமையப்பெறினும் அவை இரண்டினுடைய முடிபுகள் ஸ்தூலமாய் நோக்கின் ஒன்றாகவே இருக்கின்றன. பிரஹ்மஞானத்திற்கும், நவீன சாஸ்திரங்

---

* ஸ்ரீமான் ஜீனராஜதாஸரால் இயற்றப்பட்டது.



மிருகசீருஷத்திலுள்ள நக்ஷத்திர மேகம் (விளக்கம் 1)



சப்தரிஷி மண்டல நக்ஷத்திரமேகம் (விளக்கம் 2)

விளக்கம் 3.

களுக்கும் எதில் வித்தியாசம் ஏற்படுகிறதெனில், பிரஹ்ம ஞானம் நவீன சாஸ்திரங்களின் சங்கதிகளை ஆக்ஷேபிக்காமல் நவீன சாஸ்திரங்களால் ஒப்புக்கொள்ளப் படாததும் அல்லது அதற்கு மறைபொருளாயுள்ளதுமான இதர சங்கதிகளை ஏற்றுக்கொண்டு அதற்குரிய சித்தாந்தங்களை வற்புறுத்துகின்றது. ஆனால் சிருஷ்டியில் ஏற்பட்டிருக்கும் சங்கதிகள் ஒன்றாயிருக்கும் காரணத்தால் உண்மையில் சாஸ்திரம் ஒன்றே. ஆகையால் எது சாஸ்திரத்திற்கு ஒத்ததோ அது பிரஹ்மஞானத்திற்கு சம்மதமே. எது உண்மையில் பிரஹ்மஞானத்திற்கு சம்மதமோ அது சிருஷ்டியில் ஏற்பட்டிருக்கும் எல்லா சங்கதிகளுக்கும் ஒத்ததே. ஆகையால் அது சாஸ்திரத்திற்கு ஒருபோதும் மாறாய் இருத்தல் கூடாது;

நவீன சாஸ்திரத்தின் உயர்வான துணிபு யாதெனில் அது பரிணாமவாதமாம். அந்த பரிணாமவாதம் என்ற விஷயத்தின் பெரும் பிரவாகத்தில் சம்சாரம் என்பது ஒரு அம்சம்போன்று நமது மனதுக்கு கிராஹ்யமாகும். நவீன சாஸ்திரப் பிரகாரம் இப்பரிணாமம் யாதென்று நாம் ஸ்தூலமாய் தெரிந்துகொண்டால் பிரஹ்மஞானப் பிரகாரம் அதின் தாத்பரியம் நமக்கு நன்கு விளங்குவதாகும்.

மிருகசீரிஷ நக்ஷத்திர மண்டலத்தில் தோன்றும் நக்ஷத்திர மேகத்தை நாம் சற்று கவனிப்போம். (விளக்கம் 1) அது அநேககோடி மைல் பரப்புள்ளது அது இன்னும் ஒழுங்குப் படுத்தப்படாத திரவியக்கூட்டமாயுளது. அது அதிக உஷ்ண நிலையிலுள்ளது. அது உருவற்ற புகைபோல் உள்ள சத்தாகவும் சக்தியுற்றதாகவுமிருக்கின்றது. ஆனால் நம் திருஷ்டிக்குத் தெரிந்தமட்டில் அச்சக்தியால் யாதொரு பிரயோஜனம் ஏற்படுவதாகத் தோன்றவில்லை. இந்த ஜோதியின் கதியென்ன? இவ்விதமாகவே யாதொரு ஒழுங்கின்றி நிற்குமா, அல்லது அதில் மாறுதல் ஏற்படுமா? நாம ஸப்தரிஷி நக்ஷத்திரமண்டலத்திலுள்ள மேகத்தை நோக்கின்

மிருகசீரிஷ மண்டலத்தின் கண்ணுள்ள மேகத்தில் அடுத்து ஏற்படக்கூடிய மாறுதலை நாம் ஒருவாறு ஊஹிக்கலாம். (விளக்கம் 2.)

அந்தமேகமானது (Nebula) இப்பொழுது ஒரு வட்டமான கதியை அடைந்திருக்கிறது. அது சுழலுகிறது: ஒரு மைய உறுப்பை (Nucleus) ச்சுற்றி அதின் திரவியம் இறுகிக் கொண்டுவருகின்றது. காலக்கிரமத்தில் உறுண்டையுருவமானது தட்டையாகும். அது சுருங்கி அதின் மத்திய பாகத்தின் உஷ்ணம் குறைய அதிலிருந்து மோதிரம் போன்ற உருவத்துடன் திரவியங்கள் வெளிப்படுகின்றன. கோடிக்கணக்காக வருஷங்கள் செல்ல, இந்த மோதிரம் போன்ற திரவியங்களும் சிதறுண்டு, ஒவ்வொன்றும் ஒருமைய உறுப்பைச்சுற்றி இறுகுகின்றது. கடைசியில் மோதிரரூபமான பிரகிருதியானது கிரகமாக மாறி நிற்கின்றது. ஆதியில் மேகத்தினுடைய கதி எவ்வாறு உளதோ அதுவே இக்கிரகத்தின் கதியாம். இக்கிரகமும் மத்தியிலுள்ள ஒரு சூரியனைச் சுற்றுகிறது. மற்றொரு விதமாக, அந்த மேகமும் பலமோதிர ரூபமாகச் சிதறாமல் சுற்றிக்கொண்டு நிற்கும் சமயத்தில் தன்னிடமிருந்து திரவியக்கூட்டங்களை வெளிவீசக்கூடும். இக்கூட்டங்களும் இறுகி கிரகங்கள் ஆகின்றன. இவ்விரண்டு விதமாயும் ஆதியில் ஒழுங்கீனமாயுள்ள நக்ஷத்திர மேகமானது முடிவில் நம்முடைய சூரிய மண்டலம்போல மத்தியில் சூரியனும், சூரியனைச்சுற்றி வரும் கிரகங்களும் அமையப்பெற்ற ஒரு ஒழுங்கான சூரிய மண்டலமாக ஆகின்றது. (விளக்கம் 3)

இதற்கு அடுத்தபடி என்ன? இந்நிலை அடையுமுன்னே, சூரிய மண்டலததில் மேலசான ரஸாயன தத்துவங்கள் (Chemical Elements) தோன்றி விடுகின்றன. ஹைட்ரஜன், காரபன், நைட்ரஜன், ஆக்ஸிஜன், பாஸ்பரஸ், கால்ஸியம், இரும்பு முதலியன ஏற்படுகின்றன. அவைகள் ஒன்றோடொன்று கலந்து நிற்குங்கால் மிசிர வஸ்துக்கள்

ஏற்படுவதினால், உயிர் முதல் முதல் தோன்றுவதற்குக் காரணம் ஏற்படுகின்றது. இவ்விதமாக முதல் முதல் உயிருக்கு உடலாகும் வஸ்துவுக்கு ஆங்கிலத்தில் புரோடோபலாஸம் (Protoplasm) என்று பெயர். அதற்கு அடுத்த படி என்ன?

இந்த புரோடோ பலாஸமானது ஒன்றோடொன்று சேர்ந்து கூட்டங்களாகின்றது. அவ்விதமான கூட்டங்கள் ஓஷதிகளாகவும் பிராணிகளாகவும் தோன்றுகின்றன.

ஆரம்பமுதல் இவ்விதமாய் உயிருடன் கூடிய வஸ்துவில் இருவித கிரியைகளை நாம் பார்க்கலாம். ஒன்று, இவ்வஸ்துவானது ஆகாரத்தை உட்கொண்டு நீடூழி ஜீவிக்க வேண்டுமென்ற அவாவுடையது. மற்றொன்று தன்னைப் போல் ஒரு உருவத்தை உண்டாக்க வேண்டுமென்று விரும்புவது. இவ்விருவிதமான ஆசைகளால் அது பரிணமிக்கின்றது. லகுவான அமைப்புடன் கூடியிருந்த ரூபம் நானாவித அமைப்பைப் பெறுகின்றது. இவ்விதமான பரிணாமமானது மெதுவாகவும் படிப்படியாகவும் மேல்செல்லச்செல்ல இப்புவியில் நம் திருஷ்டிக்குத் தோன்றும் ஓஷதிவர்க்கம் போல சூரியமண்டலத்தின் கண் ஒவ்வொரு கிரகத்திலும் ஓஷதிவர்க்கம் உண்டாகின்றது.

(தொடரும்.)

விளம்பரம்.

பிரஹ்மஞானத் தமிழ் பிரசுரச்சங்கம் அடையாறு.

The Theosophical Tamil Publication Society,

Adyar.

இப்பெயரால் ஓர் சங்கம் ஏற்பாடாகி, 1860ஆ XXIவது ஆக்டுப் பிரகாரம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

சங்கத்தின் உத்தேசங்கள்.

1. மதம், தத்துவ சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம் இவைகள் சம்பந்தமான அறிவைப் பரவச்செய்யதல்.

2. பிரஹ்மஞான கிரந்தங்களை தமிழில் அச்சிட்டு வெளியாக்கல்.

3. பத்திரிகைகள், சிறு புத்தகங்கள், துண்டு பத்திரங்களைக்கொண்டு பிரஹ்மஞானத்தைப் பிரசாரம் செய்தல்,

இச்சங்கத்திற்கு முதன்முதல் காரிய நிர்வாக சபையாகச் சேர்ந்திருப்பவர்கள் பின் வருமாறு:—

1. ஸர். ஸி. ஸதாசிவ ஐயர் அவர்கள் B. A; M L; சென்னை (President.)
2. எம். எஸ். கணேச ஐயர் அவர்கள் B. A; B L; சிவகங்கை (Secretary.)
3. ஏ. ரங்கசாமி ஐயர் அவர்கள் B A; B. L, மதுரை
4. எம். என். ராமசாமி ஐயர் அவர்கள் M. A, திருச்சிறைப்பள்ளி
5. டீ. பி. பார்த்தஸாரதியார் அவர்கள் B. A; கோயம்புத்தூர்
6. வி. ராமச்சந்திர நாயுடு அவர்கள் எமனேகுடி
7. வி. வி. வெங்கடராமண அய்யங்கார் அவர்கள் B A; B. L; கோயம்புத்தூர்

பிரஹ்மஞான சபை மெம்பர்கள் தான் இதில் அங்கத்தினராகலாம்

பத்து ரூபாயிக்குக் குறையாமல் திரவிய உதவி செய்தவர்களை இச்சங்கத்தில் அங்கத்தினர்களாக எடுத்துக்கொள்ளப்படும்.

அங்கத்தினர்களுக்குப் பிரசுரம் ஒவ்வொன்றும் அரை விலைக்கு கிடைக்கும்.

நூறு ரூபாயிக்குக் குறையாத தொகை கொடுக்கும் அங்கத்தினர்களுக்கு காரிய நிர்வாக சபையிற் சேர அதிகாரமுண்டு. இவர்களுக்குப் பிரசுரம் ஒவ்வொன்றும் இனாமாகக் கிடைக்கும்.

இதனடியிற்கண்ட புத்தகங்களை தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறது:—

1 First Principles of Theosophy by M C Jinarajadasa.
2 Ancient Wisdom by Dr. Annie Besant.
3 Text Book of Theosophy by Mr. C. W. Leadbeater.

அடியிற்கண்ட புத்தகங்களின் இரண்டாவது பதிப்பு சீக்கிரம் வெளியிடப்படும்.

1 சநாதன தர்மம் (Advanced Text Book.)
2 பதஞ்சலியோக சூத்திரம்.
3 Introduction to yoga by Dr. Annie Besant.

பிரஹ்மஞானத்தின் பூரணப் பிரயோஜனத்தை லோகத்தின் நாநா தேசத்தார்களைப்போல தமிழர்களும் பெறுமாறு ஆங்கிலத்திலுள்ள அரிய புத்தகங்களை தமிழில் வெளியிடக்கருதி இம்முயற்சியை யாம ஆரம்பித்திருக்கிறபடியால், தமிழபிமானிகள் யாவரும் இதில் சேறுமபடி கேட்டுக்கொள்கிறோம்.

இது விஷயமாக அடியிற்கண்ட விலாசதாருக்கு எழுதிக் கொள்ளலாம்.

செக்ரிடரி,
தியசாபிகல் தமிழ் பப்ளிகேஷன் ஸொஸைட்டி அடையாறு

எம். எஸ். கணேசய்யர்.

காரியதரிசி.

படங்களுடன் கூடிய கதைகள்.

சமிர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ்	ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன —	ஐயர் பி. ஏ. பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை	மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின அவதாரங்கள்	ஸ்ரீ தேவாபி மஹாகுருநாதர்
ஹிந்து என்பவன் எவன்	தசாவதாரங்களின் உண்மை
காயத்திரி	எண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம்	திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
சகோதரத்வம்	லோககுருவாகிய பரமன் வருவானேன்

நம் குழந்தைகளும் நம்தேசத்துக்கு வருங்கால மகிமையும்.
டில்லிமாநகரில சக்ரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் இரண்டணா.

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
நியமங்களால உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம். சன்மார்க்கதீபம்
சத்குரு பாதங்களில். சந்தியா வந்தனம்

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் மூன்றணா.

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளாது?
(2) ஸ்தூல பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்ம தர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள் (9) கர்மம்

(10) குழந்தைகளை பழக்கும் முறையில் ஜாக்கிரதை பெற்றிருக்க வேண்டிய சுருக்கமான விஷயங்கள்.

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்
மதுரை.

ஜகப் பிரசித்தி பெற்ற

ஜிண்டான் மாத்திரை

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜிண்டானை இப்பொழுதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப் பெற்று நடைபெறும் பரவி பல பல வியாதிகளுக்கு கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளூயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகள் அணுக வொட்டாமல் தடுப்பதற்கு இம்மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்பொழுதுமே விசாரிக்கப் பெறலாம். விலையோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ். வைத்தியா அண்டு கோ,

மதராஸ்.

பிராஞ்சுகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள் டாபிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ண நாயுடு,

ஸ்ரீகிருஷ்ண ராஜா அண்டு கோ, மேலக்கோபுர வீதி மதுரை.